Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நூலகம் சன நூலகம்
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



றெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள
உறுதியான பற்களைக் கட்டிக்
மிதப்பு பற்களுக்கு கிளிப்
நீங்கள் நாடவேண்டிய
கண்டி வீதி, சாவகச்சேரி.
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, பருத்தித்துறை.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 28 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 28 (14.10.2004) வியாழக்கிழமை இதழ்: 14

# சமாதான முயற்சிகளை தொடர்வதில் நம்பிக்கையீனம் ஏற்பட்டு வருகிறது!

## பி.பி.சி. பேட்டியில் ஹெல்கிசன்

(புதுடெல்கி)

**விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுக் களை ஆரம்பிப்பதில் பெரும் தடைக்கல் லாக பாதுகாப்பு நிலவரமே உள்ளது. இதனால் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதில் எமக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டுவருகிறது.**

**எனினும் நாம் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம் என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித் தார். பி.பி.சியின் தமிழோசைக்கு வழங் கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -**



(12 ஆம் பக்கம் பார்க்க)

## காணி மோசடி வழக்கில் இராணுவப்பேச்சாளர் நீதிமன்றத்தில் ஆஜர்!

(கொழும்பு)

இராணுவப்பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா நேற்று கொழும்பு மேல்நீதிமன்றில் காணி வழக்கு ஒன்று தொடர்பாக விசாரணை செய்யப்பட்டார்.

கொழும்பு இராஜகிரிய ஒபயசேகர எனும் இடத்தில் உள்ள சில காணிகள் சம்பந்த மாக சில பொய்யான ஆவணங்களை வைத் திருந்தார் எனத் தெரிவித்து அவர் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்குத் தொடர்பாக விசாரிக்கவே நேற்று கொழும்பு மேல்நீதி மன்றிற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

வழக்கு தொடர்ந்தும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த வழக் குக் குறித்து விபரங்களெதனையும் நீதிமன் றமோ, இராணுவத்தரப்போ வெளியிட மறுத்து விட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை - சீனன்குடா சீமெந்து தொழிற்சாலை மீது நேற்று கிரனேட் தாக்குதல்!

(கொழும்பு)

திருகோணமலை - சீனன்குடாவிலுள்ள சீமெந்து தொழிற்சாலைப் பகுதியில் நேற்று மாலை கிரனேட் தாக்குதல் ஒன்று நடத் தப்பட்டது.

நேற்றுமாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. திருகோணமலை நகரிலிருந்து 9 கிலோமீற்றர் தொலைவி லுள்ள சீனன்குடா பகுதியில் பிறிமா ஆலை, பெற்றோலிய கூட்டுத்தாபன எண்ணெய்க் குதங்கள், விமானத்தளம், மீன்பிடி கூட்டுத் தாபன அலுவலகம் ஆகியன அமைந்த பகுதி யிலேயே இந்த குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

கடற்கரைப் பக்கமாக வந்த ஒருவர் தொழிற் சாலைப் பகுதியில் கிரனேட்டை வீசியதாக வும் - அது மாமரத்தில் பட்டதால் தொழிற்சாலை பகுதிக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் உதவியுடன் தான்

Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரிக்கவே நேற்று கொழும்பு மேல்நீதி மன்றிற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

வழக்கு தொடர்ந்தும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த வழக்குக் குறித்து விபரங்களெதனையும் நீதிமன்றமோ, இராணுவத்தரப்போ வெளியிட மறுத்து விட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

எனினும் நாம் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம் என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார். பி.பி.சியின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)



பெற்றோலிய கூட்டுத்தாபன எண்ணெய்க குதங்கள், விமானத்தளம், மீன்பிடி கூட்டுத்தாபன அலுவலகம் ஆகியன அமைந்த பகுதியிலேயே இந்த குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

கடற்கரைப் பக்கமாக வந்த ஒருவர் தொழிற்சாலைப் பகுதியில் கிரனேட்டை வீசியதாகவும் - அது மாமரத்தில் பட்டதால் தொழிற்சாலை பகுதிக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் உதவியுடன் தான் பலாலி ஓடுபாதை புனரமைப்பு!

## விமானப்படை தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

பலாலி விமானத்தள ஓடுபாதையை புனரமைத்து தரமுயர்த்துவதற்கு இந்தியாவின் உதவிகளையே தாம் பெரிதும் நம்பியிருப்பதாகவும் -

இந்தப் பணிகளுக்கு உதவ இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் முன்வந்ததை அரசாங்கம் நிராகரித்துவிட்டதாக வெளியான செய்திகள் தவறானதெனவும் விமானப்படைத் தளபதி எயர்மார்ஷல் டொனால்ட் பெரேரோ தெரிவித்தார்.

'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே விமானப்படைத் தளபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது - இந்தியாவின் உதவியுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் படகிலிருந்த மீனவர்களின் மீது இனந்தெரியாத குழு தாக்குதல்!

## ஒருவரைக் காணவில்லை - மற்றொருவர் காயம்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் படகொன்றில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள்மீது படகொன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் ஒருவர் காணாமற்போயுள்ளதுடன், இன்னொருவர் படுகாயமடைந்தார்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மணற்காட்டைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான சவரிமுத்து நோயேட் (வயது 38) என்பவரே காணாமற்போயுள்ளார். செபஸ்தியாம்பிள்ளை ரெஜிமன் (வயது 19) என்பவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் நேற்று அதிகாலை 3 மணியளவில் படகொன்றில் மின்பிடிக்கச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 2 ஆம் தொகுதி பட்டதாரிகளுக்கு 21 ஆம் திகதி பயிற்சிகள் ஆரம்பம்!

(கொழும்பு)

இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக நிதியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது -

இரண்டாவது குழுவினருக்கான பயிற்சி நடவடிக்கைகளுக்கான பொறுப்பு மாகாண சபைச் செயலாளர்களிடம் வழங்கப்பட்டிருக்கிறது. முதலாவது தொகுதியாளர்களுக்கான பயிற்சிகள் நடந்துகொண்டிருப்பதால் ஏற்பட்ட நடைமுறைச்சிக்கல்களே இந்த இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் தாமதமாவதற்கு காரணமாகும். இது தொடர்பாக பொதுத் திறைசேரி, மாகாண சபைச் செயலாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலின்போது இந்தப் பயிற்சி நடவடிக்கைகளுக்கான பொறுப்பினை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதால், இனிவரும் காலங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளை தாக்கியதாக இரு பொலிஸார் அடையாளம் காட்டப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தாக்கப்பட்டமை தொடர்பாக நேற்று நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் இரண்டு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் 46 சந்தேகநபர்கள் அடையாள அணிவகுப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டபோதும், இரண்டு சந்தேகநபர்கள் சுகவீனம் காரணமாக வருகை தரமுடியவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)



அடையாள அணிவகுப்புக்கு அழைத்துச் செல்லப்படும் ஒருவர்

# திருமலை ஹர்த்தாலால் சிங்களப் பகுதிகளில் இயல்புநிலை பாதிப்பு!

(திருகோணமலை)

விடுதலை புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினரை விடுவிக்ககோரி நேற்று திருகோணமலை மாவட்டங்களில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தாலால் சிங்களக் கிராமங்களில் மட்டும் இயல்புநிலை பாதிக்கப்பட்டது. எனினும் தமிழர் பிரதேசங்களில் நாளாந்தக் கடமைகள் இடையூறுகளின்றி நடைபெற்றன.

வடக்குகிழக்கு சிங்கள அமைப்பினால் பெருமெடுப்பில் ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டிருந்ததால் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை.

விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவல் படையினரையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...


ized by Noolaham Foundation.
aham.org | aavanaham.org

# நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சு

## வட கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமாக உலகவங்கியின் உதவியுடன்செயற்படுத்தப்படும் திட்டம்!

### வட கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் கட்டம் II

வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் கட்டம் II உலகவங்கியின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் திட்டமாகும். இந்தத் திட்டம் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இம்மாகாணத்திற்கு அண்டிய மாவட்டங்களான அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகல, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் 2004 - 2010 ஆண்டுகளில் செயற்படுத்தப்படவுள்ளது.

நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சினாலும் வடக்கு கிழக்கு மாகாணசபையினாலும் கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையும், அனுபவங்களையும் பெற்றவர்களிடமிருந்து யாழ். மாவட்டத்திலுள்ள சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் (13 வெற்றிடங்கள்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொதுவிதிகள்:**

1) பதவி தற்காலிகமானது - முதலில் ஒரு வருடத்துக்கு நியமன ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். பின்னர் நிறுவனத்தின் தேவைக்கேற்பவும் முதல் வருட சேவைக்காலத்தில் திருப்திகரமாக சேவையாற்றியிருப்பினும் தொடர்ந்தும் சேவை நீடிப்பு வழங்கப்படும்.

2) வயதெல்லை - விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இந்த வயதெல்லை அரச/கூட்டுத்தாபன சேவைகளில் உள்ளவர்களுக்குப் பொருந்தாது.

3) சம்பளம் -

3.1 பட்டதாரிகளுக்கான சம்பளம் - மாதாந்த சம்பளம் 9375 ரூபாவும் இடைக்காலப் படியாக 2200 ரூபாவும் புதிய பட்டதாரிகளுக்கும் ஏனைய பட்டதாரிகளுக்கு முகாமைத்துவசேவைகள் சுற்றுநிருப இல.10 இற்கு இணங்க சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

இந்த நியமனங்கள், முதல் மூன்று மாத காலத்துக்கு பயிற்சி அடிப்படையிலும் அதன்பின்பு ஒப்பந்த அடிப்படையிலும் வழங்கப்படும். பயிற்சிகள் - முதலாவது மாதத்தில் திருகோணமலையிலும் அதன்பின் இரண்டு மாதங்கள் யாழ்ப்பாண மாவட்ட நியாப் காரியாலயத்திலும் வழங்கப் படும்.

பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் 6000 ரூபா (சகல படிகளும் உட்பட) பயிற்சிக்காலப் படியாக வழங்கப்படும்.

3.2 டிப்ளோமா கல்வித் தகைமையுடையோருக்கான சம்பளம் -

மாதாந்த சம்பளம் ரூபா 5570 உம், இடைக்காலப் படியாக ரூபா 2200 உம் இந்தக் கல்வித் தகைமையுடன் நேரடியாக நியமனம் பெறுபவர்களுக்கு வழங்கப்படும். ஏனையவர்களின் சம்பளம் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல.10 இற்கு இணங்க பேசித் தீர்க்கப்படும்.

3.3 க.பொ.த உயர்தர கல்வித்தகைமையுடையோரின் சம்பளம் -

மாதாந்த சம்பளம் ரூபா 5240 உம் இடைக்காலப் படியாக ரூபா 2200 உம் இந்தக் கல்வித் தகைமையுடன் நேரடியாக நியமனம் பெறுபவர்களுக்கு வழங்கப்படும். ஏனையவர்களின் சம்பளம் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இல.10 இற்கு இணங்க பேசித்தீர்க்கப்படும்.

4) கொடுப்பனவு -

4.1 சம்பளம் மாதாந்தமும் படிகள் நிறைவேற்றும் வேலையின் அளவு என்ற அடிப்படையிலும் வழங்கப்படும்.

4.2 அரசசேவையிலிருந்து விடுபடுபவர்களினதும் ஓய்வுபெற்றவர்களினதும் சம்பளம் அவர்கள் பெற்ற கடைசிச் சம்பள அடிப்படையில் பேசித் தீர்க்கப்படலாம். படிகள் நிறைவேற்றும் வேலையின் அளவு என்ற அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படும்.

5) விண்ணப்பதாரி (1) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். (2) வடக்கு கிழக்கு மாகாணத்திலும் ஏனைய அண்டிய மாவட்டங்களில் கடமை புரிவதற்கான சுகதேக ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். (3) மையக் கிராமத்தில் தங்கியிருந்து வேலைசெய்யவேண்டும். (4) அறிக்கை எழுதுதலில் தொடர்பாடல் ஆற்றலிலும் சிறந்தவராக இருத்தல் வேண்டும்.

6) விண்ணப்பிக்கும் முறை -

தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களின் கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள் பிறந்த திகதி, முன்னைய வேலை அனுபவங்கள் ஆகிய விபரங்களைக் குறிப்பிட்டு, தமது விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் - பதிவுத் தபாலில் மாவட்ட செயலாளர்/ அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 01.11.2004 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அரசசேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் - தமது விண்ணப்பத்தினை தமது திணைக்களத் தலைவர்/செயலாளர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். பெண்கள் விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

7) தெரிவுமுறை -

பொருத்தமான விண்ணப்பதாரிகள் - மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர். தெரிவுசெய்யப்படுபவர்களில் குறைந்தது 50 வீதமானோர் பெண்களாக இருப்பர்.

8) கடமைகளும் பொறுப்புக்களும் -

J மையக் கிராமங்களிலுள்ள மக்களுக்கும் பிரதேசசெயலாளர் மட்ட உத்தியோகத்தர்களுக்குமிடையே திட்டம் சம்பந்தமான விழிப்புணர்வினை ஏற்படுத்தி, அவர்களிடையே நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்துதல்.

J மையக் கிராமங்களுக்கான சமூக பொருளாதார நிலைமை சம்பந்தமான அறிக்கையினையும், கிராம அபிவிருத்தித் திட்டத்தினையும் சமூகசெயற்பாட்டுத் திட்டத்தினையும், ஜீவனோபாய உதவித்திட்டத்தினையும் தயாரித்தல்.

J திட்டத்தின் கட்டுமான செயற்பாடுகளின் திட்டமிடல், செயற்படுத்தல் ஆகியவற்றுக்கான வசதிகளையும் இணைப்புக்களையும் ஏற்படுத்தல்.

J மையக் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படும் ஜீவனோபாய ஆதாரத் திட்டம், சிறு குழுக்கள் அமைத்தல், சிறுகுழு சேமிப்பு, நுண் கடன் பராமரிப்பு, பராமரிப்பு பதிவேடுகள் பேணுதல் போன்ற விடயங்களினை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் இணைத்தல்.

J கிராம மட்ட அமைப்புக்களின் நிறுவனக் கட்டமைப்பு விருத்திக்கு உதவுதல்

J மையக் கிராமங்களில் சமூக சிறுகுழுக்களை உருவாக்குதல். குழு சேமிப்பு, நுண்கடன் திட்ட முகாமைத்துவம், கணக்குப்பதிவு செய்தல் தொடர்பான பயிற்சிகள் நடத்துதல்.

J மையக் கிராமங்களில் நடத்தப்படும் எல்லாப் பயிற்சிகளையும் இணைத்தல்.

J திட்ட முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.

9) கல்வித் தகைமைகளும், ஏனைய தகைமைகளும் -

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

9.1) சமூகவியல், சமூகவிஞ்ஞானம், விவசாயம், புவியியல், பொருளியல், வர்த்தகம், வர்த்தக முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஒன்றில் பல்கலைக்கழக பட்டம் பெற்றிருப்பதுடன் சமூக வலுவூட்டலுடன் தொடர்புடைய வேலைகளில் மூன்று வருட நிரூபிக்கப்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

9.2) விவசாயம், சமூகவிஞ்ஞானம், வர்த்தக அபிவிருத்தி ஆகியவற்றில் ஒன்றில் டிப்ளோமா கல்வித்தகைமை பெற்றிருப்பதுடன் சமூகவலு வூட்டலுடன் தொடர்புடைய வேலைகளில் ஐந்து வருட நிரூபிக்கப்பட்டுள்ள அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

9.3) க.பொ.த உயர்தரக் கல்விச் சான்றிதழ் புவியியல், கணக்கியல், வர்த்தகம், பொருளியல், வர்த்தகக் கல்விப் பாடத்துடன் பெற்றிருத்தலுடன் சமூகவலுவூட்டலுடன் தொடர்புடைய வேலைகளில் எட்டு வருடங்கள் நிரூபிக்கப்பட்டுள்ள அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

9.4) ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சியும் தமிழிலும் சிங்களத்திலும் அல்லது இவற்றில் ஒன்றில் சமூகத்துடன் தொடர்பாடும் ஆற்றலும் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

*மாவட்ட செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*14.10.2004*

**செ.பத்மநாதன்,**
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-3260)

## முதியோர் தின நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு யாழ்.பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார். மேற்படி தினத்தையொட்டி நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வு நல்லூா பிரதேச செயலர் பிரிவிலும் சு.தெய்வேந்திரம் தலைமையில் மதியம் 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கலந்துகொள்ளவுள்ளார். அங்கு முதியோருக்கும் சிறுவர்களுக்குமான கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

## தென்னம் நாற்று வழங்கும் விழா!

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி விவசாயப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியின் அங்கத்தவர்களுக்கு தென்னம் நாற்று வழங்கும் வைபவம் இன்று காலை 9.30 மணிக்கு பிரதேசசெயலர் செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும் தென்னை அபிவிருத்தி சபையின் வடபிராந்திய முகாமையாளர் என். சிவச்சந்திரன் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்வர்.

## நவராத்திரி விழா!

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் நடத்தும் நவராத்திரி விழா இன்று பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சி. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட பூஜையில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.சத்தியதாசன் சக்தி வழிபாடு என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

J J J

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அம்பாள் ஆலயத்தில் - நவராத்திரி விழாவை முன்னிட்டு தினமும் காலை 8 மணிமுதல் அம்பாளுக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூஜைகளும் இடம்பெறும். மாலை 5 மணிக்கு மாலைப் பூஜைகளும் அதனைத் தொடர்ந்து கொலு பூஜைகளும் இடம்பெறும்.

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான

ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.0010.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், சோனியா அகர்வால் நடித்த
மதுர
(சி-2723)
தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
14 - 15 வரை விஜயகாந், பிரபுதேவா
எங்கள் அண்ணா
பு.நே 10.30, 2.30 மட்டும்
இன்றுமட்டும் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா, நம்பியார்
ஆயிரத்தில் ஒருவன் இரவு 6.30, 9.30
16 முதல்
G/7 றெயின்போ காலனி
(சி-2725)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்ரீதியாக எம்மைப் பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சி செய்துவருகின்றது!

## யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி



இன்று வலுவான அரசியல் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிற்கவேண்டியுள்ளது. அதற்கான முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட்டுவருகிறோம் என, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

தேசிய மட்டத்தில் நடைபெற்ற குண்டெறிதல் போட்டியில் - தங்கப் பதக்கம் வென்ற யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவி கு.தர்சினியைக் கௌரவிக்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -


தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர் ஐரோப்பிய நாடு களுக்குச் சென்று எமது உண்மை நிலைப்பாடென்ன? பேச்சுக்களில் தாமதத்திற்கான காரணமென்ன? என்பது குறித்து விளக்கமளித்து வருகின்றனர்.

அரசியல் ரீதியாக சர்வதேச மட்டத்தில் எம்மைப் பலவீனப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது. எம்மிடம் இராணுவ பலம், நிர்வாக பலம், மக்கள் பலம் உட்பட யாவும் உள்ளன.

இன்று நாம் அரசியல் ரீதியான பலத்தையும் பெற்றுவரும் நிலையிலேயே உள்ளோம். அதற்கான பாரிய முயற்சியில் இறங்கியுள்ளோம்.

இன்றைய தினம் தமிழ் தேசியத்துக்குப் பெருமை தேடித்தந்த கு.தர்சினியை வாழ்த்தும்போது, இங்கு ஓர் விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். இந்தச் சாதனையைக் கேட்டு இந்தப் பிள்ளையைப் பெற்ற பெற்றோர் எத்தகைய மகிழ்ச்சி அடைந்திருப்பார்களோ, அதே மகிழ்வை எமது தேசியத் தலைவரும் அடைந்திருப்பார். அவர் விளையாட்டுத்துறையை வளர்க்க வேண்டும், அதன்மூலம் எமது மக்களின் பெருமையை உலகறியச் செய்யமுடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர்.

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்காகவும், கௌரவத்திற்காகவுமே நாம் பாடுபடுகின்றோம். அந்த வகையில் இந்தப் பெண்வீராங்கனையும் கௌரவிக்கப்படவேண்டியவரே. இதனை யாரும் மறுக்கமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரால், கொக்குவில்-பிரம்படி வீதியில் படுகொலை செய்யப்பட்ட 40 பொதுமக்களின் 17 ஆம் ஆண்டு நினைவுநாளில் புதிதாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவிக்கும் யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன்.




பாஷையூர் கவிஞர் மு.சிங்கராயரின் 'மடு அன்னை பிள்ளைத் தமிழ்' நூல் வெளியீட்டு விழாவில் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆய்வுரை நிகழ்த்துகிறார். அரங்கில் - பிரதேச செயலாளர் செந்தில் நந்தனன், அருட்கலாநிதி எஸ். வி.பீ.மங்களராசா அடிகளார், பேராசிரியர் என்.சண்முகலிங்கம். (206)

# கிராம அலுவலர் செயலகங்களுக்கு தனியான கட்டடம் அவசியம்!

## பொதுமக்கள் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேசங்களில் இயங்கிவரும் கிராம அலுவலர் அலுவலகங்களுக்குத் தனியான கட்டடம் அமைக்கப்படவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிராமசேவகர்கள் தமது அலுவலகங்களைத் தமது வீட்டிலோ, தனியார் வீடுகளிலோ வைத்திருக்கின்றனர். இதனால் அந்தந்தப் பிரதேச மக்கள் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகவே, ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் - கிராம மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள இலகுவாகத் தனிக்கட்டடங்கள் அமைக்கப்படவேண்டும். இதன்மூலம் மக்களின் தேவையில்லாத அலைச்சல்களைக் குறைக்க முடியுமெனவும் மக்கள் தெரிவித்தனர். (14)

# அளவெட்டி இளைஞரை 3நாட்களாக காணவில்லை

(அளவெட்டி)

அளவெட்டி வடக்குப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கடந்த மூன்று தினங்களாகக் காணவில்லை என, யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த 19 வயதான ஆ.ஜெகதீசன் என்பவரையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நபர் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் அளவெட்டி கிழக்கிலுள்ள உறவினர்கள் வீட்டிற்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து புறப்பட்டுச்சென்றார்.

ஆயினும், நேற்றுவரை இவர் வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி 3 வருடங்களாக அதிகரிக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி அடுத்த வருடத்திலிருந்து மூன்று வருடங்களாக அதிகரிக்கப்படவுள்ளது.

இதுவரை இந்தக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்து நான்கு பிரிவுகள் வெளியேறியுள்ளன. இவர்களின் நலன்கருதி மூப்பு அடிப்படையில் 01.01.2005 ஆம் ஆண்டுமுதல் விளையாட்டு விஞ்ஞானத்தில் உயர்கல்வி டிப்ளோமா என்ற ஒருவருடக் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதுவரை காலமும் இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறியாக இருந்த உடற்கல்வி .விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியை, மூன்று வருடமாக மாற்றுவதன் மூலம் இந்தக் கற்கை நெறியின் தரத்தை உயர்த்துவதுடன், வெளியேறிய மாணவர்கள் பாதிக்கப்படாமல் மேலதிக ஒருவருடக் கற்கை நெறியாக, விளையாட்டு விஞ்ஞானத்தில் உயர் கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காக 15 ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளது. இந்தக் கற்கை நெறி தொடர்பான விபரங்களும், விண்ணப்பப்படிவமும் பத்திரிகை வாயிலாகத் தெரிவிக்கப்படும் என இந்தக் கல்வியின் பொறுப்பான அதிகாரி கலாநிதி டி.குணராஜசிங்கம் தெரிவித்தார். (91)

# எழுதுநர் பதவியுயர்வுப் பரீட்சை நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது!

அரச பொது எழுதுநர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, பண்டகசாலைக் காப்பாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வுக்கான பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, இதற்கான விண்ணப்பப் படிவங்களை விரைவாக அனுப்பிவைக்குமாறு, வடக்கு - கிழக்குப் பொதுச் சேவை ஆணைக்குழ செயலாளர் கேட்டுள்ளார்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களைப்பெற்று எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்குமாறு,

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து ஆளுநர் செயலாளர்கள், பிரதம செயலாளர்கள், அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், மாநகர ஆணையாளர்கள், நகரசபை, பிரதேச சபைச் செயலாளர்கள் ஆகியோரை, வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சொ.விநாயகலிங்கம் கேட்டுள்ளார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### திருட்டுப்போன டெக் மீட்கப்பட்டது

கடந்த மாதம் புளியங்கூடல் பகுதியில் திருடப்பட்ட விடியோ டெக் ஒன்று அரசியற்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை அடுத்து மீட்கப்பட்டது.

புளியங்கூடல் அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள வீடொன்றில் இருந்து திருடப்பட்ட டெக், இந்தப் பகுதியிலுள்ள மற்றுமோர் வீட்டிலிருப்பதாக உரிமையாளரால் அரசியற்துறையினரிடம் முறையிடப்பட்டதையடுத்து, குறித்த வீடு சோதனையிடப்பட்டு டெக் மீட்கப்பட்டு உரிமையாளரிம் கையளிக்கப்பட்டது. (99)

### வட்டுக்கோட்டை பகுதியில் திடீர் வாகன சோதனை!

வட்டுக்கோட்டை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமையன்று சித்தன்கேணி, சங்கரத்தைச் சந்திகளில் திடீர் வாகனச் சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனைகளின்போது சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு, வாகன உரிமம், காப்புறுதி, தலைக்கவசம் மற்றும் ஆவணங்களும் சோதனை செய்யப்பட்டன.

நூற்றுக்கணக்கானோர் இவற்றைக் கைவசம் வைத்திராத காரணத்தால், அவர்களின் தேசிய அடையாள அட்டையை வாங்கியதோடு, சிலருக்கு எதிராக வழக்கும் பதிவுசெய்யப்பட்டது.

கூடுதலாக மோட்டார் சைக்கிள் வாகன சாரதிகளே இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

### தென்மராட்சி உணவகங்களில் சுகாதார சீர்கேடு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளிலுள்ள உணவகங்களில் பெருகிவரும் ஈக்களால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற சந்தையை அண்டிய பகுதிகளிலேயே இவ்வாறான நிலை காணப்படுகிறது.

இந்தப் பகுதி உணவகங்களில் உள்ள உணவுப் பொருட்களின்மீது அதிகளவான ஈக்கள் மொய்ப்பதனைக் காணக்கூடியதாக இருப்பதாகவும், இதனால், தொற்று நோய்கள் பல தொற்ற வாய்ப்புள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

### செங்குந்தா சந்தை கடைத்தொகுதி திறப்புவிழா

(நல்லூர்)

நல்லூர் செங்குந்தா சந்தையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி உத்தியோகபூர்வமாக நாளை திறந்துவைக்கப்படவுள்ளது.

பகல் 12.30 மணியளவில் இந்த வைபவம் இடம்பெறவுள்ளது. இந்தக் கடைத்தொகுதியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன திறந்துவைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி குணராசா கேட்டுள்ளார்.

### கணித பாட ஆசிரியருக்கு இன்று செயலமர்வு

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்களின் கணிதபாட அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான செயலமர்வு, இன்று காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மாகாண மட்டத்தில் நடைபெற்ற முதலாவது மதிப்பீட்டுப் பரீட்சையில் 25 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட புள்ளியைப் பெற்ற மாணவர்களின் விடைத்தாள்களுடன் கணித பாட ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவிததுள்ளார். (29)

### துர்நாற்ற மையமாக ஆலடி பொதுச்சந்தை

ஆலடி பொதுச்சந்தை துர்நாற்றம் வீசும் குப்பைகூழங்களுள்ள பிரதேசமாக மாறிவருகின்றது.

வியாபாரிகளால் சந்தைப் பகுதிகளில் கொட்டப்படும் கழிவுகளாலேயே, இந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை காலத்தில் சேறும் சகதியுமாக இந்தப் பகுதி இருப்பதனால், சந்தைக்கு வரும் மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்தப் பகுதியில் சுகாதாரம் பேண நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (14)

# சத்துணவு வழங்கும் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும்!

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தரம் 1 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சத்துணவுத் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் தெரிவித்தார்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 120 பாடசாலைகளில் முதற்கட்டமாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 24 ஆயிரம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் நன்மை அடைகின்றனர்.

இந்தத் திட்டம் 508 பாடசாலைகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது. இதன்மூலம் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் முதலாம் ஆண்டு மாணவர் ஒருவருக்கு நாளாந்தம் 15 ரூபா பெறுமதியான சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. (122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்டன் பதவியில் எனக்கு எந்த ஆசையும் இல்லை!

## கில்கிறிஸ்ட் கூறுகிறார்



அவுஸ்ரேலிய அணியின் முழு நேர கப்டன் பதவியைப் பெறவேண்டும் என்ற இலட்சியம் எனக்குக் கிடையாது என்று அவுஸ்ரேலிய அணி வீரர் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் கப்டனான ரிக்கி பொண்டிங் காயம் காரணமாக இந்தியா வரவில்லை. பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டில் விளையாடாத அவர், சென்னையில் இன்று தொடங்கும் 2 ஆவது டெஸ்டிலும் ஆடமாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் துணை கப்டனும், விக்கெட் காப்பாளருமான அடம் கில்கிறிஸ்ட் தற்காலிக கப்டனாக இருந்தார். பெங்களூர் டெஸ்டில் அவரது கப்டன் பதவி அனைவராலும் பாராட்டும் வகையில் இருந்தது.

அவுஸ்ரேலிய அணியின் முழு நேர கப்டன் பதவியைப் பெறவேண்டும் என்ற லட்சியம் எனக்குக் கிடையாது.

என்னைப் பொறுத்தவரை கப்டன் பதவியில் மிகப்பெரிய விருப்பம் கிடையாது. வோன், லேமன் போன்ற சிரேஷ்ட வீர்கள் அணியில் உள்ளனர் என்று அவர் கூறினார்.

கில்கிறிஸ்ட் 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் துணை கப்டன் பதவியை பெற்றார். இதுவரை 4 டெஸ்ட் போட்டிகளுக்கு தற்காலிக கப்டனாக இருந்துள்ளார். இதில் 3 டெஸ்டில் வெற்றியும் கிடைத்துள்ளது.

இதேவேளை, சென்னையில் நேற்றுமுன்தினம் ஓட்டேரியில் உள்ள குடிசைப் பகுதிக்கு கில்கிறிஸ்ட் சென்றார். அங்குள்ளவர்களுடன் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார். சிறுவர்களுக்கு துடுப்பாட்ட நுணுக்கம் கற்றுக் கொடுத்தார். குழந்தைகளைக் கொஞ்சி மகிழ்ந்தார்.

மேலும் அவர் அங்குள்ள சாலையோர கடைகளில் சாப்பிட்டு அனைவரையும் இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தினார். இட்லி கடையில் அமர்ந்து அவர் அப்பம், தோசை சாப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது -

இது எனக்கு சந்தோஷத்தை அளித்தது. இந்தியாவில் அதிகளவில் கிரிக்கெட்டை ரசிக்கிறார்கள். முதல் முறையாக சென்னையில் இது மாதிரியான நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளேன் என்று குறிப்பிட்டார்.

# உலக சாதனை படைப்பதை விட அணியின் வெற்றியே முக்கியம்



(சென்னை)

தனிப்பட்ட சாதனையை விட அணியின் வெற்றியே முக்கியம் என்று - அவுஸ்ரேலிய அணியின் சுழல பந்து வீச்சாளர் ஷேன் வோன் தெரிவித்தார்.

உலகின் தலை சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவராகத் திகழும் வோன், 113 டெஸ்ட போட்டிகளில் விளையாடி 531 விககெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இன்னும் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினால் அவர் அதிக விக்கெட் எடுத்த முரளிதரனின் சாதனையை (532 விக்கெட்) முறியடிப்பார்.

சென்னையில் இன்று தொடங்கும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் வோன் இந்தச் சாதனையை முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் சேப்பாக்கம் மைதானத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்-

இதற்கு முன்பு சென்னை மைதானம் எனக்கு சாதகமாக இல்லை. கடந்த முறை இங்கு வந்தபோது தோல்வியைச் சந்தித்தோம். தற்போது நாங்கள் 1-0 என்ற முன்னிலையில் உள்ளோம்.

என்னைப் பொறுத்தவரை முரளிதரனின் சாதனையை முறியடித்து புதிய சாதனை படைப்பதைவிட டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவதே முக்கியம். அதற்கே முக்கியத்துவம் கொடுப்பேன்.

சென்னை டெஸ்டிலும் வெற்றிபெறுவதற்கு நல்ல திட்டம் வைத்துள்ளோம். அதற்கு ஏற்றவாறு செயற்படுவோம். இவ்வாறு ஷேன் வோன் மேலும் குறிப்பிட்டார்.




## டொனால்ட் கிண்ண கிரிக்கெட் போட்டி

# காலிறுதி ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணி வெற்றி!

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதலாவது காலிறுதியாட்டம், கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது - 5 விக்கெட்டுக்களால் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக சொக்ஸ் அணி இலகுவான வெற்றியை பெற்றது.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் - சென்றலைட்ஸ் சொக்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற இந்த காலிறுதிப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணியினர் 29.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அன்புஜன் 33 ஓட்டங்களையும், நவநீதன் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியின் சார்பில் பிரசாத், கஜிதரன், சதீஸ், கார்த்தீபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியினர் 16.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களை பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றனர்.

இதில் சுதர்சன் 24 ஓட்டங்களையும், பிருந்தாவன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இந்தச் சுற்றுப்போட்டியின் ஏனைய காலிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 16,17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (58)

# மணிரத்னத்தின் இயக்கத்தில் சச்சின் குறும்படத்தில் நடிக்கிறார்

(சென்னை)

சச்சின் டெண்டுல்கர் நடித்து மணிரத்னம் இயக்கும் குறும்படத்தின் படப்பிடிப்பு நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்றது.

சச்சின் டெண்டுல்கர் விளையாடுவதைப் பார்க்க ஆர்வமாக மைதானத்தில் கூடும் குழந்தைகள், படப்பிடிப்பு நடந்த இடத்திலும் நூற்றுக் கணக்கில் குவிந்து விட்டனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஊனமுற்றவர்களின் நலனுக்காக செயற்படும் சக்தி பவுண்டேஷன் அமைப்பு ஊனமுற்றவர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக குறும்படம் ஒன்றைத் தயாரிக்கிறது.

இந்தப் படத்திற்கு திரைக்கதை எழுதி இயக்குபவர் மணிரத்னம். சமீபத்தில் தமிழிலும், இந்தியிலும் ஒரே நேரத்தில் வெளியான ஆய்த எழுத்து, யுவா வெற்றிக்குப் பிறகு மணிரத்னம் இயக்குவது ஊனமுற்றவர்களின் நலனுக்காக இயக்கும் இந்தக் குறும்படம்.

ஏற்கனவே பல ஆண்டுகள் சக்தி பவுண்டேஷனின் நடவடிக்கைகளில் பங்குபெறும் கிரிக்கெட் வீரர் அனில் கும்ளே கேட்டுக்கொண்டதால், சச்சின் டெண்டுல்கர் இந்தக் குறும்படத்தில் நடிக்கிறார்.



இதன் படப்பிடிப்பு நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு நுங்கம்பாக்கத்திலுள்ள சர்வதேச ரெனிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

மதியம் ஒரு மணிவரை நடந்த படப்பிடிப்பில் உற்சாகமாக சச்சின் கலந்துகொண்டார். தேர்ந்த நடிகரைப் போலவே அடிக்கடி முடியைச் சரிசெய்து கொண்டும், சளைக்காமல் உடை மாற்றிக்கொண்டும் நடித்த சச்சினைப் பார்க்க ஏராளமான குழந்தைகள் கூடிவிட்டனர்.

மைதானத்தில் ஓட்டங்களைச் சச்சின் குவிக்கும் போது குழந்தைகளிடம் இருக்கும் அதே உற்சாகம் அவர் நடித்தபோதும் இருந்ததுதான் ஆச்சரியம்.

சக்கர நாற்காலியில் உட்கார்ந்து ஊனமுற்றவர்களுடன் பேசிச் சிரித்து சச்சின் நடித்ததை ரசிகர்கள் கூட்டம் மூன்று மணி நேரம் சளைக்காமல் வேடிக்கை பார்த்தது.



2006 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளின் தற்போதைய கோல் காப்பு வீரர் ஒலிவர் கானுக்கு சவாலாக திகழப்போகும் ஜேர்மன் கோல் காப்பு வீரர் ஜென்ஸ் லீமன்.



பங்களாதேஷில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் பங்கேற்க டாக்கா வந்துள்ள நியூஸிலாந்து அணியினர்...

# ஓட்டங்களை குவித்தால்தான் வெற்றியைப் பெற முடியும்!

## கங்கூலி கூறுகிறார்

துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களைக் குவித்தால்தான் வெற்றியைப் பெறமுடியும் என்று இந்திய அணியின் கப்டன் கங்கூலி தெரிவித்தார்.

பெங்களூரில் நடந்த முதல் டெஸ்ட்போட்டியில் தோல்விகண்ட இந்திய கிரிக்கெட் அணி சென்னையில் நடக்கும் 2 ஆவது டெஸ்ட் போட்டியை அதிகம் நம்பியுள்ளது. இன்று ஆரம்பமாகும் சென்னை டெஸ்ட் போட்டி குறித்து இந்திய கப்டன் கங்கூலி நிருபர்களிடம் பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறுகையில் - பெங்களூர் டெஸ்ட் போட்டியை பொறுத்தவரை 3 ஆவது நாளிலேயே நாங்கள் தோல்வியடைந்து விட்டோம்.

இந்திய சுழல் பந்து வீச்சாளர்கள் நல்ல முறையில் பந்து வீசினார்கள். இனி துடுப்பாட்ட வீரர்கள்தான் சாதிக்கவேண்டும். இனிவரும் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டம் குவித்தால் மட்டும்தான் வெற்றி கிடைக்கும் என்று தெரிவித்தார்.

பெங்களூரில் இந்திய முன்னணி துடுப்பாட்ட வீரர் யாரும் சரியான முறையில் ஓட்டம் எடுக்கவில்லை. முன்னணி ஆட்டக்காரர்கள் அனைவருக்கும் சென்னை டெஸ்ட் பெரிய சவாலாக அமைந்துள்ளது.

4 போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்ரேலியா 1-0 என முன்னணி பெற்றிருக்கிறது. சமநிலையை




எட்ட இந்தியாவுக்கு நல்ல வாய்ப்பு உருவாகியிருக்கிறது. இந்திய மற்றும் அவுஸ்ரேலிய வீரர்கள் நேற்று பயிற்சி மேற்கொண்டனர். இந்திய வீரர்கள் சிறிது நேரம் உடற்பயிற்சி செய்த பின்னர் துடுப்பாட்ட மற்றும் பந்துவீச்சு பயிற்சியில் ஈடுபட்டனர்.

முதல்டெஸ்ட் போட்டியில் கிடைத்த வெற்றி காரணமாக அவுஸ்ரேலிய வீரர்கள் அதிக புத்துணர்ச்சியுடன் காணப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கு பிரிட்டன் தொடர்ந்து ஆதரவளிக்கும்

## பிரிட்டிஷ் எம்.பி தெரிவிப்பு

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம ஸ்திரத் தன்மையை நிலை நிறுத்த போர் நிறுத்த உடன்படிக்கையைப் பேணுவது அத்தியாவசியமானதெனவும், இதற்குப் பிரிட்டன் தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்குமெனவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்த பிரிட்டன் கொமன்வெல்த் அமைப்பின் நான்கு பேர் அடங்கிய நாடாளுமன்றக் குழுத் தலைவரான கிரஹாம் அலன் தொவித்தார்.

இவர்கள் கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் இவர்கள் பிரிட்டன்- இலங்கை நட்புறவுச் சங்கத்தினரை அவர்களது அலுவலகத்தில், அதன் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரத்னாயக்க தலைமையிலான குழுவினரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது அலன் மேலும் தெரிவித்ததாவது -

சமாதான முயற்சிகள் தொடர்பாக பிரிட்டனுக்கு போதியளவு அனுபவம் உள்ளது. எனவே இந்த அனுபவத்தை இலங்கையிலுள்ள கட்சிகள் அனைத்தும் சமாதான முயற்சிகளுக்காகப் பயன்படுத்தலாம். ஒரு விடயத்தை இனவாதத்துக்கும் கடும்போக்கான நிலைப்பாட்டுக்கும் அப்பால் பார்க்கவேண்டும்.

அத்துடன், இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கமும், எதிர்க்கட்சியும் அனுசரணையாளரான நோர்வையைப் பற்றிப் பிடிக்கவேண்டிய காலமும் இதுவாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தை நிச்சயம் மீள ஆரம்பிக்கப்படவேண்டும்.

இது தொடர்பாக நாம் உதவிகளை வழங்குவோம் என மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான ஒஸ்ரின் மிக்கெல் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை - பிரிட்டன் நட்புறவுச் சங்கத்தின் இலங்கைக்கிளை சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான 'றோகித பொகோல் லாகம (பிரதித் தலைவர்) சஜித் பிரேமதாஸ மற்றும் இந்த சங்கக் குழுவின் பிரதித்தலைவர் சச்சிதானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசாங்கத்தரப்பில் இந்தச் சங்கத்திலுள்ள எவரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மட்டு – மாங்கேணியில்

# கிளைமோர் குண்டுடன் இளைஞர் அகப்பட்டார்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாங்கேணி பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை இளைஞரொருவர் - கிளைமோர் குண்டுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சித்திரவேல் இராமச்சந்திரன் என பவரே அவரது வீட்டில் வைத்து வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் தனது வீட்டுக்குப் பின்புறம் இரவு நேரம் குழிதோண்டிக் கொண்டிருக்கையில் - சந்தேகம் கொண்ட பொலிஸாரும், இராணுவத்தினரும் சென்று பார்த்தபோது கிளைமோர் குண்டொன்றை குழியிலிருந்து எடுப்பதைக் கண்டனர்.

ஏற்கனவே தான் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகியதாக இந்தநபர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தையடுத்து - இவருக்கும், கருணா கும்பலுக்கும் தொடர்புகள் இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இவர் கைது செய்யப்பட்டவுடன் கொடுத்த தகவலையடுத்து, சட்ட விரோதமாக துப்பாக்கி வைத்திருக்கும் நபரொருவரை பொலிஸாரும், இராணுவத்தினரும் தேடிச்சென்ற போதிலும் அந்த நபர் துப்பாக்கியுடன் தலைமறைவாகி விட்டார்.

கிளைமோர் குண்டுடன் கைது செய்யப்பட்ட நபர் நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, நீதிபதி எம்எச். எம்.அஜ்மீர் விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

### வவுனியா மாவட்டத்தின்

# கல்வியியல் கல்லூரி நிர்வாகத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா கல்வியியல் விஞ்ஞானபீட மாணவர்களது அடிப்படை சுகாதார வசதிகள் பற்றிக் கண்டுபிடிக்காத நிர்வாகத்தினருக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு விஞ்ஞானபீட மாணவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

உணவு மற்றும் நீரில் விஷக் கிருமிகள் கலந்ததன் காரணமாக, வவுனியா கல்வியியல் கல்லூரி விஞ்ஞானபீட மாணவர்கள் 150 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதோடு, தற்காலிகமாக விஞ்ஞான பீடம் மூடப்பட்டுமுள்ளது.

விஞ்ஞானபீட மலசலகூடங்களில் உற்பத்தியாகி, அவற்றிலிருந்து வெளியேறிய விஷக் கிருமிகள் - உணவு மற்றும் நீரில் கலந்ததன் காரணமாக இந்த நிலை தோன்றியுள்ளதாக சுகாதார உத்தியோகத்தரின் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் எந்தவொரு ஊடகவியலாளரையும் விஞ்ஞானபீடத்தில் உள்நுழைவதற்கு அனுமதி வழங்காததையிட்டு, வன்னி ஊடகவியலாளர் சங்கம் - விஞ்ஞானபீட ஆணையாளருக்கும், மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் முறைப்பாடு செய்யத் தீர்மானித்துள்ளது. (தே)

# விடுதலைப் புலிகளின் அரசியற்குழு நெதர்லாந்தின் பிரதிநிதிகளை சந்திப்பு



(கொழும்பு)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் நெதர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

நெதர்லாந்தின் தலைநகர் அம்ஸ்ரடாமில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - நெதர்லாந்து வெளிவிவகார அமைசசின் அதிகாரிகள், முதன்மைச் செயலாளர்கள், முரண்பாட்டு ஆய்வு அதிகாரிகள் மற்றும் இனமுரண்பாட்டு கற்கை நெறிக்கான பேராசிரியர்கள் ஆகிய பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல மணிநேரம் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையில் இலங்கையின் தற்போதைய சமாதானச் செயற்பாடுகள், சமாதான நிலைப்பாடுகள், வடக்கு-கிழக்கு அபிவிருத்தி, கிழக்கின் தற்போதைய நிலைமை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான இக்குழுவில், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் செல்வி, தமிழீழ பிரதி மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கீதா ஆகியோர் கலந்துகொண்டனர்.



அத்துடன், எதிர்வரும் 19 ஆம் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிற்குச் செல்லும் விடுதலைப் புலிகளின் அரசியலமைப்புக் குழுவினர் - நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் தெரிவிக்கும் நோக்கில் - நோர்வேயின் பிரதிநிதிகள் சந்திப்புக்களை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சந்திப்புக்களை மேற்கொள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஷன் இந்தியாவுக்கும், நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அமெரிக்காவுக்கும் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தச் சந்திப்புக்கள் தொடர்பான விளக்கங்களை விடுதலைப் புலிகளுக்கு அளிப்பதற்காக 19ஆம் திகதிக்கு முன்னர் இவர்கள் நோர்வே திரும்பவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்ச்செல்வன் வருகைக்கு கண்காணிப்புக்குழு காத்திருப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கான பயணம் ஒன்றை மேற்கொண் டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் வன்னிக்குத் திரும்பும் வரை காத்திருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் சொல்னஸ்,

போர் நிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்புடைய விடங்கள் தொடர்பாகவே விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட ஊர்காவல் படையினரை விடுதலை செய்வது தொடர்பாகவும், கிழக்கில் இடம்பெற்று வருகின்ற குழப்ப நிலைகள் பற்றியும் பேச் சுவார்த்தை நடாத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் போர் நிறுத்த உடன்படிக்கையில் ஒத்துக் கொள்ளப்பட்ட விடயங்களை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.



கொழும்பு வந்த சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர் மிக்கெனின் கெல்மிறே அம்மையார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# இராணுவ அதிகாரி சிசிர விஜேசூரியவுக்கு கட்டாய விடுமுறையில் செல்ல பணிப்பு

(கொழும்பு)

லஞ்ச ஊழல் மற்றும் பண மோசடிக் குற்றச்சாட்டில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைதாகி, பின்னர் நிபந்தனையின் பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூர்யவைக் கட்டாய விடுமுறையில் விஜேசூரியவை அனுப்புமாறு இராணுவத் தளபதி [illegible] சுக்கு சிபாரிசு செய்யவுள்ளதாகத் தெரியவரு கிறது.

எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி - தனது 55 ஆவது வயதை முடிக்கும்போது, ஓய்வு பெறவுள்ள விஜேசூரிய, விஜயபாகு படையணியின் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றி வந்தார். சாந்த கொட்டேகொடவின் அவசர அறிவித்தலின்படி, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவும், மேஜர் ஜெனரல் ஜி.டபிள்யூ. ஜயசுந்தரவும், மோசடியில் கைதான விஜயசூர்யவின் பணிகளை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனவரி மாதத்தில் ஓய்வு பெறும் வரை, விஜேசூரியவைக் கட்டாய விடுமுறையில் செல்ல அனுமதிக்கும் படியே சாந்தகொட கோரியுள்ளார்.

1997 - 2001 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் 1.9 மில்லியன் ரூபா பண மோசடி மற்றும் லஞ்ச ஊழலில் விஜேசூர்ய ஈடுபட்டுள்ளமை நீதிமன்றத்தில் வெளியானதையடுத்தே, இத்தகைய அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரக்கறிகளை உலரவைத்து வற்றலாக்கி உபயோகிக்கலாம்

எமது அன்றாட பிரதான உணவு வகைகளில் ஒன்றாக மரக்கறிகளைக் குறிப்பிடலாம். மரக்கறி வகைகள் மூலம் எமது உடலுக்கு அத்தியாவசியமான விற்றமின், கனிப்பொருட்கள், நார்ப் பொருட்கள் போன்ற பல போசாக்குகள் கிடைக்கின்றன. இவை எமது உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு உதவுகின்றன.

மரக்கறிகள் இருபோகங்களான சிறு போகத்திலும், பெரும் போகத்திலும் பயிரிடப்படுகின்றன. மரக்கறிகளுக்கு ஏற்றவாறு அவற்றின் அறுவடைக் காலகட்டமும், போகமும் மாறுபடும் சில சந்தர்ப்பங்களில், பலர் ஒரே வகையான மரக்கறியைப் பயிரிடுவதனால், அல்லது அளவுக்கு அதிகமான அறுவடை மூலம் மரக்கறிகளின் நிரம்பல் சந்தையில் அதிகரித்துக் காணப்படும்.

இதனால், சந்தையில் மரக்கறிக்கான நிரம்பல் அதிகரிப்பைவிட, அதற்கான கேள்விக் குறைவானது, மரக்கறியின் விலையில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். உற்பத்தியாளருக்குத் தனது உற்பத்திக்கான விற்பனை விலையில் இலாபம் பெறமுடியாமல், நட்டமடைய வேண்டி ஏற்படும். அத்துடன் மரக்கறிகள் வீணாகப் பழுதடைந்து, தூக்கி எறியவேண்டி ஏற்படும்.

இவ்வாறு, மரக்கறி உற்பத்திகள் அதிகமாகும் காலங்களில், அவற்றைப் பழு



தடையாமல் பாதுகாக்க முடியும். பாதுகாக்கும் முறைகளை உபயோகித்து மரக்கறிகளைச் சேமிக்க முடிந்தால், இவற்றின் விலை வீழ்ச்சியடைவதைத் தடுக்கமுடியும். இதனால், விவசாயிகள் இலாபம் பெற்றுக் கொள்ளலாம்.

அந்தவகையில் மரக்கறி வகைகளைக் காயவைத்து, வற்றலாக்கிப் பாதுகாப்பது மிகச் சிறந்த முறையாகவுள்ளது. இவ்வாறு மரக்கறிகளைக் காயவைத்து வற்றலாக்கும் போது, அவற்றில் தங்கியுள்ள நீரின் அளவு 8% - 12% மாகக் குறைவடைகிறது. கரட், பீன்ஸ், பாகற்காய், லீக்ஸ், பலாக்காய் போன்ற வற்றை இதற்காகப் பயன்படுத்தமுடியும்.

மரக்கறிகளைக் காயவைத்து வற்றலாக்கும்போது, பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.


தெரிந்தெடுக்கப்பட்ட மரக்கறியைச் சுத்தமாகக் கழுவிக்கொள்ளவேண்டும். பின்னர் துருப்பிடிக்காத கத்தியைப் பயன்படுத்தி, மரக்கறியை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவேண்டும். மரக்கறிகளைப் பொறுத்தும், அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டும் அளவு மாறுபடும்.

கத்தரிக்காய், பாகற்காய், வெண்டிக்காய் ஆகியனவற்றை ஆறு மில்லி மீற்றர் துண்டுகளாகவும், வாழைக்காயை - 3 - 4 மில்லி மீற்றர் துண்டுகளாகவும், பீன்ஸை - சிறு துண்டுகளாகவும் வெட்டி, சிற்றிக் அமிலம் அல்லது எலுமிச்சம் சாறுகலந்த நீர் அடங்கிய பாத்திரத்தில் ஊறவிட வேண்டும்.

பின்னர் இவற்றை எடுத்து 100 பாகை செண்டிகிரேட் வெப்பமான நீரில் 3 - 6 வினாடிகள் ஊறவைக்கவேண்டும். மரக்கறியின் நிறம் மாறாதிருக்க வேண்டுமாயின், இந்த 1 லீற்றர் நீருக்குள் பொட்டாசியம் மெற்றாபயிட் சல்பயிட் (KMS) அல்லது சோடியம் மெற்றாபயிட் சல்பயிட் (SMS) 25 கிராம் கலந்துகொள்ளவேண்டும். இது மரக்கறிகள் பழுதடையாமல் பாதுகாக்கவும் உதவி புரிகின்றது. குறித்தளவே பயன்படுத்த வேண்டும். இது முக்கியம்.

இதன்பின்னர், மரக்கறித் துண்டுகளைச் சூரிய வெப்பத்திலோ அல்லது சூடேற்றும் இயந்திரம் மூலமோ காயவைக்கவேண்டும். சூடேற்றும் இயந்திரமாயின் துண்டுகளை ஒரே மாதிரிக் காயவைப்பதற்காக, மேல் தட்டுக்களையும், கீழ் தட்டுக்களையும் மாற்றுவது அவசியம்.

மரக்கறியின் ஈரத்தன்மை 8% - 12% மாகக் குறைவடைந்த பின்னர், பொதிசெய்து வைத்துக்கொள்ளலாம். இதனை நீண்ட



காலத்துக்கு வைத்திருந்து தேவைக்கேற்ப பயன்படுத்தமுடியும்.

சூடேற்றும் இயந்திரம்மூலம் மரக்கறிகளைக் காயவைக்க 4 - 6 மணித்தியால காலம் எடுக்கும். வெப்பமும் சீராக இருக்கும். ஆனால், சூரிய வெப்பம் மூலம் காயவைக்க நீண்ட நாட்கள் எடுக்கும். மழைகாலங்களில் சிரமங்கள் ஏற்படலாம்.

எனவே, மேலதிகமாக இருக்கும் மரக்கறிகளை இவ்வாறு காயவைத்து, வற்றலாக்கிப் பயன்படுத்தலாம். மரக்கறிகள் வீணாவதையும் தவிரத்துக் கொள்ளலாம். இதனை ஒரு சுயதொழில் முயற்சியாகவும் எடுத்து வருமானமீட்டலாம். ◆

**சசி சந்திரகாசன்**

# சுற்றாடலின் உயிர்ப்பன்முகத் தன்மையுடன் தொடர்புபட்ட சேதன விவசாயத்துறை

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

மண் வளத்தைக் கருத்தில் கொள்ளாத இரசாயனப் பசளையைப் போன்றல்லாது, மேலே குறிப்பிட்ட பசளையானது- சேதனக் கட்டமைப்பிலுள்ள ஊட்டப் பதார்த்தங்கள் நுண்ணுயிர்களின் செயற்பாடு காரணமாக இயற்கையாகவே சமநிலைக்குட்படுத்தும் பிரதியீடுகளை மண்ணில் கலக்கச் செய்கிறது. இதன்மூலம் மண் உறுதிப்படுத்தப்படுகிறது. இத்தகைய மண் விருத்தியானது. வேர்களின் சீரான விருத்திக்கும், தாவரங்களின் செழிப்பான வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகிறது.

**மாற்று முறைப் பயிர்ச் செய்கை**

சேதன விவசாயத்தின் இன்னொரு பண்பு மாற்று முறைப் பயிர்ச்செய்கையாகும். இந்த முறைமூலம், சந்தை நோக்குள்ள தோட்டங்களில் சாதாரணமாக நடைபெறுவது போன்று ஒரே பயிரைத் தொடர்ந்து பயிர் செய்வதில்லை. பயிர் மாற்று முறைமூலம் மண்ணின் ஒவ்வொரு படையிலுமுள்ள மண் வளங்களும், நீர் வளங்களும் உச்ச அளவில் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு வருடத்துக்கு இரண்டுபோகம் என்ற அடிப்படையில் குறித்த வருடங்களுக்கான போகங்களை உள்ளடக்கிய பயிர்ச்செய்கை வட்டத்துக்கமைய, மீண்டும் குறித்த வருடங்களின் முடிவில் முதலில் செய்த பயிர் அதே நிலத்தில் பயிரிடப்படும்.

**நிலத்தைத் தரிசாக விடல்**

சேதன விவசாயத்தின் மேலும் ஒரு பண்பு தரிசாக நிலத்தைவிடலாகும். தவளைகள், பறவைகள், ஓணான் போன்ற இயற்கை உயிரினங்களின் வாழ்விடமாக அமைக்கும் நோக்கில், விவசாயிகள் ஒவ்வொரு போகத்தின் போதும் அல்லது 4 நிலத் துண்டுகளைத் தரிசாக விடுவர். தரிசு நிலங்களில் வளரும் புல், பூண்டுகள் விலங் குணவுகளுக்காகவும், பசளை தயாரிப்புக் காகவும் பயன்படுத்தப்படும்.

தரிசாக்கப்படும் முறையின் கீழ், ஒரு நிலத்தில் இரு போகங்கள் மட்டுமே பயிரிடப்பட முடியும். இதனால், செறிவான காணிப் பாவனை மூலம் நிகழும் நிலவள இழப்புக்கள் தவிர்க்கப்படுவதுடன், மண் புனர் நிர்மாணத்துக்கான வாய்ப்பும் ஏற்படுகிறது.

**மண் பாதுகாப்பு**

மண் பாதுகாப்புக்காக எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கை அல்லது செயல் சரிவு டன் கூடிய நிலங்களில்



சமவுயரக் கல்வரி சையை அமைப்பதாகும். மண்ணரிப்பைத் தடுப் பதற்காக ஒவ்வொரு கல் வரிசை களையும் சுற்றிப் பொருத்தமான புல் வகைகள் நடப்படும். வண்டல் மண்ணுடன் கூடிய பிரதான நீர்வடிகாலில், காணியிலிருந்து அரிபட்டு வரும் மண், தடுத்து நிறுத்தப்படும். இந்த வடிகால் நீர், மீன் வளர்ப்புக் குளத்துக்குத் திருப்பப்படும்.

காணியின் கீழ் எல்லைகளிலுள்ள மரங்களும், மண் பாதுகாப்புக்குப் பெரி தும் உதவுகின்றன. சேதன விவசாயத் தில் களை பிடுங்குதல், நிலத்தைச் செப்பனிடல், அறுவடை செய்தல் ஆகியவை தவிர்க்கப்படுகிறது.

மண்ணிலுள்ள நுண்ணுயிர்களும், மண்ணமைப்பும் பாதுகாக்கப்படும் வகையில் சாதாரண மண்வெட்டிக்குப் பதிலாக முள்ளுகளுடன்கூடிய மண் வெட்டிகள் பயன்படுத்தப்படும். சீரான பயிர்ச்செய்கை மாதிரியால், மண் நேரடியாக மழை வீழ்ச்சிக்குத் திறந்துவிடப்படாத வகையில் நிலத்துண்டுகள் பயிர்ச்செய்கைக்குப் பயன் படுத்தப்படுகின்றன.

அத்துடன், ஒரே நேரத்தில் அறு வடை மேற்கொள்ளப்படுவதும் தடுக் கப்படுகிறது. இதனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிலம், மழை, வெயில, காற்று போன்றவற்றுக்கு முழுமையாகத் திறந்திருக்காது. இந்த அடிப்படையில் மண், நீர் ஆகியன பாதுகாக்கப் படுவதற்கான வழியேற்படுகின்றது. பண்ணையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலிப் பயிர்களும் கல்வரிசைகளைச் சுற்றியுள்ள புல் பூண்டுகளும் மொத்தமாகப் பண்ணைக்குப் பாதுகாப்பாகவே அமையும்.

**சேதனப் பசளை**

சேதனப் பசளையை உருவாக்கப் பலதரப்பட்ட பொருட்கள் உபயோகிக்கப்படுகிறது. தாவரங்களினால் உருவாக்கப்படும் திரவப் பசளை, பல்வேறு உற்பத்தி முறைகளை உபயோகித்து, பண்ணையிலிருக்கும் பசளைப் பொருட்களால் ஆக்கப்படும் பொஸ்பேற் பசளை உயிர் வாயு அலகுகளினால் பெற்றுக் கொள்ளப்படும் உயிர்ப் பொருட்களின் மிச்சங்கள், வெளிப்பயிர்களின் இலைகளாலும், வேலி மரங்களிலிருந்து வெட்டப்படும் இலை குழைகளாலும் பெறப்படும் இலைப் பசளை ஆகியன நல்ல பயன்களைத் தரும் சேதனப் பசளைகள் என இனங் காணப்பட்டுள்ளன.

**பீடைத் தடுப்பும் உயிர்பல்வகைமைப் பாதுகாப்பும்**

படைகளைக் கட்டப்படுத்துவதற்காக இயறகையான வழிவகைகள் பயன்படுத்தப்படுகிறது. இரசாயனப் பொருட்களை விசுறுவதை நிறுத்துவதனால், இயற்கையான பீடைகளின் ஒழிப்பில் சாதக நிலைமைகள் ஏற்படும்.

அதன் மூலம் பீடைகளின் இயற்கையான எதிரிகளின் விருத்திக்கு, உரிய சூழல் உறுதிபடுத்தப்படுகிறது. மரங்கள், செடிகள், வேலி மரங்கள், புல்பூண்டுகள் மற்றும் தரிசுக் காணித் துண்டுகள் இயற்கை எதிரிகளுக்கான ஒரு வாழ்விடத்தை வழங்கி, அவற்றைப் பாதுகாக்கின்றன.

மேலும், பீடைகளை இல்லாதொழிக்கும் தன்மை கொண்ட வர்ண மலர்கள், கொத்த மல்லி போன்ற பயிர்களும் சிலவேளைகளில் நடப்படும். இத்தகைய மலர்கள் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும். பீடை ஒழிப்பில் நத்தைகளும், மண் புழுக்களும் பயன்படுவதுடன், மூஞ்சூறு, எலிகளை ஒலியெழுப்பும் உபகரணங்களால் விரட்டியடிக்க முடியும். மேற்கூறிய முறைகளுடன், வேம்பு, வெள்ளைப்பூண்டு, சவர்க்கார கலவை ஆகியவற்றை உபயோகித்து தயாரித்த சேதனப் பீடை நாசினிகளையும் பயன்படுத்தலாம்.

சேதன விவசாய உற்பத்தி முறையிலுள்ள சிரமங்களால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இந்த முறையில் ஈடுபாடுள்ளவர்களின் தொகை குறைவாகவேயுள்ளது.

இதற்கான காரணங்களில் மிக முக்கியமானது சந்தைப்படுத்தல் பிரச்சினையாகும். சேதன உற்பத்திச் சந்தைப்படுத்தலில் நுகர்வோரின் குறைவான விழிப்புணர்வு ஒரு முக்கிய தடையாகவுள்ளது.

விவசாய இரசாயனங்களின் சந்தைப்படுத்தலுக்காகப் பல்தேசியக் கம்பனிகள் விளம்பரத்துக்காகப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுகின்றன. இது சேதன விவசாயத்தைவிட, செயற்கை விவசாயம் உயர்ந்தது என்ற மனப் பாங்கை விவசாயிகளிடம் ஏற்படுத்துகிறது.

சேதனப் பசளை, உயர் பீடை நாசினிகளின் உற்பத்தி, அதற்கான பண்ணை வீட்டுக் கால்நடை வளர்ப்புக்கு ஏற்படும் நேரச் செலவும், வேறு பல காரணங்களும் விவசாயிகளுக்கு இந்த முறையின் மீதான ஆர்வத்தைக் குறைக்கின்றது.

இலைப் பசளைகள், சாம்பல், காய்ந்த இலைகள், கோழிஉரம் போன்ற சேதனப் பசளை உரங்களைப் பெறுவதில் ஏற்படும் சிரமமும் இன்னொரு காரணம். இரசாயன முறையை விட்டு, சேதன முறைக்கு மாறும் போது உடனடியாக அதன் நன்மைகள் விவசாயிகளுக்குக் கிடைக்காது.

இவையே இயற்கையுடன் ஒத்துப்போகும் இந்த விவசாய முறையில், விவசாயிகளுக்கு ஆர்வமின்மை ஏற்படக் காரணமாக அமைகிறது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்மலர்

## திறமையான நிர்வாகத்துக்கு திட்டமிடல் அவசியம்

நிர்வாகம் என்பது எந்தவொரு விடயத்தையும் சிறப்பாகவும், திறம்படவும் நிறைவேற்றுதல் எனக் கொள்ளலாம். எனவே, நிர்வாகமானது - வேலைசெய்யும் இடத்தில் உண்டு. வியாபாரத்தில் ஈடுபடும் போதும் உண்டு. சொந்த வாழ்க்கையிலும் உண்டு.

நிர்வாகத்தில் திறமையுடன் செயற்பட சில விதிமுறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். சொந்த வாழ்க்கையில் நிர்வாகத்துக்கு எங்கே இடம் என்று பலர் கேட்கக் கூடும். குடும்பத்தை நடத்துவது, குடும்பப் பிரச்சினைகளைச் சமாளிப்பது, போதிய அளவுக்கு பணம் உழைத்துக் குடும்பத்தைக் காப்பது - அனைத்துமே நிர்வாகம்தான்.

நிர்வாகம் முறைப்படி நடக்கவில்லையாயின், அனைத்துமே தலைகீழாகிவிடும். திட்டமிட்டபடி எதுவும் நடக்காது, வாழ்க்கையில் அமைதி இருக்காது, மகிழ்ச்சி ஏற்படாது. பிரச்சினைகளைப் பார்த்துப் பயப்படுவது கோழைத்தனம். புத்திசாலிகள் பிரச்சினைகளை எதிர்கால வாய்ப்பாக உருவாக்கிக் கொள்கிறார்கள். அதாவது, பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்று தவித்துக்கொண்டிருப்பதை விட்டு விட்டு புதிதாக என்ன செய்யலாம் என்று சிந்தித்து, புதிய வாய்ப்பை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

மின்சாரம் தடைப்பட்டால் - வீடோ, அலுவலகமோ இருளில் மூழ்கிவிடும். எந்த வேலையிலும் ஈடுபடமுடியாது. மின்சாரத்தை எதிர்பாத்து மின்சார நிறுவனத்துடன் தொடாபு கொண்டு, உடனே பழுதுபார்க்கும்படி சொல்வது வழக்கம். அடுத்த கட்ட நடவடிக்கையாக மீண்டும் மின்சாரம் வரும் வரையில் மெழுகுவர்த்தி ஏற்றிவைக்கிறார்கள்.

மின்சாரம் போய்விட்டது. தங்கு தடையின்றி மின் விளக்குகள் எரிய வேண்டும். அலுவலக வேலை சீராக நடைபெறவேண்டும். வீட்டு வேலைகள் தொடர்ந்து நடக்க வேண்டும். என நினைப்பவர்கள் புதிய யுக்தியைக் கையாளுகிறார்கள். மின்சாரம் வரும் வரையில் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்துகிறார்கள்.

பொதுவாக கடைக்காரர்கள் ஜெனரேட்டர் இல்லாமல் இருப்பதில்லை. மின் தடையால், கடை இருட்டாவதைத் தடுக்க ஜெனரேட்டர்கள் இயங்குகின்றன. அலுவலகங்களில் பெரியளவு ஜெனரேட்டர்கள் செயற்படுகின்றன. பத்திரிகை அலுவலகங்கள் மின்சாரம் தடைப்பட்டாலும், குறித்த நேரத்துக்கு பத்திரிகை வெளியாகவேண்டும் என்பதால் இதனைப் பயன்படுத்துகின்றன.

பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது, அவற்றைச் சமாளிக்க புதிய வழிகளைக் கண்டுபிடிப்பது இன்றைய உலகில் மிகவும் அவசியமாகிறது. அவசரமாக ஒரு வேலை நடைபெற வேண்டுமென வைத்துக்கொள்ளுவோம். அந்தக் குறிப்பிட்ட வேலை நடைபெறாமல் இழுத்தடிக்கப்பட்டால், அதனை எவ்வாறு சமாளிப்பது என்பது ஒரு கேள்வி.


அவசரமானது என்றாலும் மிகவும் முக்கியமானதா என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். முக்கியமானது இல்லையென்றால் அவசரத்தைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை.

ஒரு அலுவலகத்தில் வேலைபார்க்கும் பொறியியலாளருக்கு, வேலைகள் அதிகம். அனைத்துமே அவசர வேலைகள். ஒரு பெரிய பாலம் கட்டுவதற்கான தேவைகள் எவை, மொத்தம் எவ்வளவு செலவாகும் என்ற புள்ளி விபரங்களைத் தயாரிக்கவேண்டும்.

தினசரி அலுவல்களைப் பார்ப்பதற்கே அவருக்கு நேரம் போதவில்லை. பக்கத்துக் கிளையில் பணியாற்றும் இளம் பொறியியலாளர்களிடம் சென்றார். எனக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. பாலம் ஒன்று கட்டுவதற்கான புள்ளி விபரங்களைத் தயாரித்துக் கொடுக்க முடியுமா? எனக்கேட்டார்.

அவர் சிறிதும் யோசிக்கவில்லை. தாராளமாக உங்களுக்கு உதவிசெய்ய விரும்புகிறேன். ஆனால், ஒரு விடயம் - என்னுடன் வாருங்கள் என, பக்கத்திலிருந்த ஒரு கரும்பலகையின் முன் அவரைக் கூட்டிச் சென்றார்.

அதில் அந்த இளம் பொறியியலாளர் ஒரு வாரத்துக்குள் செய்து முடிக்கவேண்டிய வேலைகள் என்னென்ன என்று எழுதப்பட்டிருந்தது. அனைத்தும் முக்கியமான திட்டங்கள், சிறிது சிக்கலானவையும்



கூட. 'நான் செய்யவேண்டிய வேலைகள் என்னென்ன என்பதை எழுதி வைத்துக் கொண்டு செயற்படுகிறேன். திகதி தவறாமல், நாள் தவறாமல் இவைகளை முடித்து மேல் அதிகாரிகளிடம் விளக்கவேண்டும். இவைகளில் எந்த வேலையைத் தள்ளிப்போட்டு விட்டு உங்கள் வேலையை நான் செய்யவேண்டும்? என்று கேட்டார்.

உதவி கேட்ட பொறியிலாளர் சிறிது நேரம் யோசித்தார். என்ன சொல்வதென்று தெரியாமல் நின்றார்.

அதற்குள் இளம் பொறியியலாளர் ஒரு கேள்வியைக் கேட்டார். 'உங்கள் வேலை அவசரமானதா? முக்கியமானதா? முக்கியமானதல்ல. அவசியமானது மட்டுமே என்றார்.

முக்கியமானது இல்லை என்றால், தள்ளிப் போடலாம் அல்லவா? என்றார் இளம் பொறியியலாளர்.

உதவிகேட்டுப் போனவர் திரும்பி வந்தார். அவசரமானதாக இருந்தாலும், சில விடயங்கள் முக்கியமானதல்ல என்பதால் சிறிது காலம் கடந்து பார்த்துக்கொள்ளலாம் என உணர்ந்து கொண்டார். அதிக வேலையில்லாத வேறு ஒருவரை அணுகி தனது வேலையை செய்து முடித்தார்.

எதையும் அவசரமாக வேலை முடிக்க வேண்டும் என நினைப்பவர்கள், முக்கியத்துவம் என்ன என்பதைத் மறந்து விடுகிறார்கள்.

முதலில் செய்யவேண்டிய வேலைகள் என்ன என்பதைத் தீர்மானிக்கவேண்டும். அவை முக்கியமானவையா, அதே நேரத்தில் அவசரமானவையா என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும்.

சிலர் எப்போதும் எதிலும் அவசரத்தையே காட்டுவார்கள். ஆனால், முக்கியமான வேலைகளை மறந்துவிடுவார்கள். ஆகையால் எதையும் திட்டமிட்டு செயற்படுவதுதான் நல்ல நிர்வாகத் திறமையை வெளிப்படுத்தும். *

## காகிதத்தில் குறுந்தகடு

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சொனி நிறுவனமும், டோப்பன் நிறுவனமும் இணைந்து, புதிய வகை ஒளியிழை குறுந்தகட்டை (ஒப்டிக்கல் கொம் பாக்ட் டிஸ்க் -OCD) தயாரித்துள்ளன. அந்த டிஸ்க் 51 சதவீதம் காகிதத்தால் ஆனது. அதனால் இதனுடைய உற்பத்திச் செலவு பெருமளவு குறையும்.

தற்போது நடைமுறையில் உள்ள டிஸ்குகள், சிவப்புக் கதிர்வீச்சுத் தொழில்நுட்பத்தில் இயங்கும். டி.வீ.டி ப்ளேயர்களில் இயங்கக் கூடியனவாகவுள்ளன. இவற்றை விட புதிய காகித டிஸ்குகள் ஐந்து மடங்கு தகவல்களைச் சேமிக்க வல்லவை. இவை ப்ளுரே என அழைக்கப்படுகிறது.

இந்த ப்ளுரே நீலக் கதிர்வீச்சு தொழில்நுட்பத்தில் இயங்கும் டி.வீ.டி ப்ளேயர்களல் மட்டுமே செயற்படும் தன்மை கொண்டவை.

இந்தவகை ப்ளேயர்கள் அடுத்த சில ஆண்டுகளில் விற்பனைக்கு வரவுள்ளன. இவை அதிவேகமாகத் தகவல்களை படிக்கவும், துல்லியமான காட்சிகளை வெளிப்படுத்தவும் உதவக்கூடியவை. *

# சிறுதொழில்

## குறைந்த மூலதனத்துடன் இலாபம்தரும் கோழிவளர்ப்பு



நாட்டுக் கோழிகள் இல்லாத வீட்டைக் கிராமங்களில் காண்பது அரிது. கோழிகளையும், முட்டைகளையும் விற்றுப் பணத் தேவையைப் பூர்த்திசெய்யும் குடும்பங்கள் கிராமங்களில் இருக்கின்றன. இன்றும் நகரங்களில்கூட சில குடும்பங்கள் கோழிகளை வளர்த்து, முட்டைகளை விற்பதைக் காணலாம்.

நாட்டுக்கோழி வளர்ப்புப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு, பட்டப்படிப்போ, பெரிய பெரிய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டிய தேவையோ இல்லை. எங்களுக்கு யார் கடன்தரப்போகிறார்கள் எனக் கவலைப்படவும் தேவையில்லை. ஆர்வம் இருந்தால் போதும். ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் பணம் தேவையில்லை. ஐந்து கோழிகள் இருந்தால் போதும், ஒரு வருடத்தில் 50 இற்கும் மேலாகக் கோழிகள் பெருகிவிடும்.

**மூன்று முக்கிய அடிப்படைகள் -**

மூலதனம், மூலக்கருவிகள், மூலப் பொருள்கள் மூன்றும் அடிப்படைகள். இந்த மூன்றும்தான் கோழி வளர்ப்பின் அடிப்படையான விடயங்கள். மூலப் பொருள் என்பது - கோழிகள். மூலக் கருவிகள் என்பது - கோழி வளர்ப்புக்குப் பயன்படும் கூடு, அடை வைக்கப் பயன்படுத்தப்படும் பொறி, குஞ்சுகளை வளர்க்கப் பயன்படுத்தும் பொறி இவைதான் மூலக் கருவிகள். கோழி வளர்ப்புத் தொழிலுக்காகச் செலவழிக்கப் பயன்படுத்தப்படும் பணம்தான் - மூலதனம்.

கோழிவளர்ப்பில் முக்கியமான அம்சமாக இருப்பது முட்டை உற்பத்தி. எந்தளவுக்குக் கோழிகளைக் கவனத்துடனும், கருத்துடனும் வளர்க்கின்றோமோ அந்தளவுக்கு எமக்குப் பயன் கிடைக்கும்.

**கோழித்தீவனங்கள்**

கோழிக்கு வழங்கப்படும் உணவுகள், கோழிவளர்ப்பில் பிரதானமானது.

கோழியை முட்டை தரக்கூடிய, இறைச்சி தரக்கக்கூடிய ஒன்றாக மட்டும் பார்க்கக் கூடாது.

கோழிவளர்ப்பில், கோழிகளை இரவில் கூட்டில் அடைப்பதும், அதிகாலையில் அவற்றைத் திறந்துவிடுவதும் மட்டுமே நாம் செய்யவேண்டிய வேலை எனக் கருதுவது பிழையானதாகும். நாட்டுக் கோழிகள்தானே வளவிலுள்ள குப்பைகளில் - பூச்சி, புழுக்களைத் தின்று தன் உணவுத் தேவையைத் தீர்த்துக் கொள்ளும் என்றும் நினைக்கக்கூடாது. ஒரு கோழி வளர்த்தாலும், ஐம்பது கோழி வளர்த்தாலும் அதற்குத் தீர்க்கமான கவனத்துடனும், நடைமுறையுடனும் கோழிக்கு உணவு கொடுக்கின்றோமோ அந் தளவுக்கு எமக்குப் பயன் உண்டு.

ஒரு கோழிப்பண்ணைக்கு மொத்தமாக ஆயிரம் ரூபா செலவு செய்தால், அதில் அறுநூறு ரூபாவைக் கோழியின் உணவுக்காகச் செலவழிக்க வேண்டும். அப்படிச் செலவு செய்தால்தான் இலாபம் பெறமுடியும்.

சத்தான, சுகாதாரமான உணவுகளைக் கொடுக்கவேண்டும். சத்தான தீவனங்களைத் தினனும் கோழி - அதிக முட்டையிடும். முட்டையும் பெரிதாக இருக்கும். குஞ்சுப் பருவம் முதல நல்ல ஆகாரங்களைப் போட்டு வளர்ககவேண்டும்.

**கோழிப்பண்ணை தொடங்கமுன் கவனிக்க வேண்டியவைகள் -**

கோழிப்பண்ணை அமைக்கத் தீர்மானித்தவுடன், ஏற்கனவே கோழிவளர்ப்பில் அலலது கோழிப்பண்ணை வைத்திருக்கும் அனுபவசாலிகளிடம் ஆலோசனை கேட்கலாம். அதனால் தெரியாத விடயங்களைத் தெரிந்துகொள்ளமுடியும்.

ஆரம்பத்தில் குறைந்தளவில் கோழியை வைத்துத் தொழிலை ஆரம்பிக்கலாம். குறைவான இடத்தில் பணத்துக்கு ஆசைப்பட்டு, அதிகமான கோழிகளை வளர்க்கக்கூடாது. அது கோழிகளுக்கும் நல்லதல்ல. தொழிலுக்கும் நல்லதல்ல.

முழு நேரமாகத் தொழிலில் ஈடுபடத் தீர்மானித்துவிட்டால், அதற்காகத் தேவைப்படும் ஏனைய விடயங்களில் முழுமையாக ஈடுபடவேண்டும். அப்போதுதான் தொழிலில் வெற்றிபெறமுடியும். தொழில் வெற்றியை யாரும் தரமாட்டார்கள். நாம்தான் பெறவேண்டும்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | பருத்தித்துறை | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 15/= | 35/= | 40/= | 30/= | 35/= | 40/= |
| வெண்டிக்காய் | 25/= | 15/= | 20/= | 30/= | 20/= | 15/= | 25/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 60/= | 60/= | 60/= | 60/= | 65/= | 70/= |
| கத்தரிக்காய் | 60/= | 60/= | 50/= | 60/= | 40/= | 50/= | 60/= |
| பாகற்காய் | 80/= | 50/= | 80/= | 90/= | 80/= | 70/= | 80/= |
| கரட் | 40/= | 40/= | 40/= | 50/= | 40/= | 40/= | 40/= |
| பீற்றூட் | 20/= | 15/= | 20/= | 30/= | 20/= | 20/= | 20/= |
| முருங்கைக்காய் | 30/= | 40/= | 50/= | 60/= | 40/= | 50/= | 20/= |
| வெங்காயம் | 30/= | 30/= | 25/= | 30/= | 30/= | 35/= | 30/= |
| பச்சை மிளகாய் | 30/= | 35/= | 25/= | 40/= | 40/= | 40/= | 30/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்குப் பின் மக்கள் திரள்வதை தடுப்பதற்கு சூழ்ச்சிகள் நடக்கின்றன!

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்



சிங்களப் பேரினவாத இராணுவம் இந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்படவேண்டும் என, தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெ. கஜேந்திரன், கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் தெரிவித்தார்.

எங்களுடைய தாயகப் பிரதேசம் ஆனது எதிரியிடம் இருந்து முழுமையாக மீட்டெடுக்கப்படவேண்டும். எங்களுடைய பிரதேசங்களை ஆக்கிரமித்து கொண்டிருக்கும் சிங்கள பேரினவாத இராணுவம் இந்த மண்ணில் இருந்து விரட்டியடிக்கப் படவேண்டும். இராணுவத்தை விரட்டியடிப்பதற்கான ஒரு போராட்டம் நீண்ட காலமாக எமது மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விடுதலைப் போராட்டம் களத்திலே பல சாதனைகளைப் படைத்து ஒரு உச்சக்கட்ட நிலையை அடைந்துள்ள இந்த நேரத்திலேயே சர்வதேச நாடுகளின் தலையீட்டினால் ஒரு யுத்தநிறுத்த சூழ்நிலை உருவாகியுள்ளது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை ஒரு பலமான நிலையிலேதான் இந்த சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. கடந்த இரண்டரை வருட காலமாக சமாதானம் என்றொரு போர்வைக்குள் மறைமுகமானதொரு அரசியல் திட்டத்துக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பிளவுபடுத்தி, புலிகளை பலவீனப்படுத்துவதற்கும், விடுதலைப் புலிகளுக்கும், மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை துண்டிப்பதற்கும் மக்கள் விடுதலைப் புலிகளின் பின்னால் அணி திரள்வதை தடுப்பதற்கும் திரைமறைவிலே பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் எமது தாயகப் பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் முஸலீம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் முரண்பாடுகளை ஏற்படுத்தும் தமிழ் மக்கள் மத்தியில் பதற்ற நிலையை உருவாக்கிவருவதால் விடுதலைப் புலிகளின் பின்னால் அணிதிரள்கின்ற மக்களை தடுத்து நிறுத்தல் போன்ற பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலே தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொலைகளுக்கு நேரடியாகவே இராணுவத்தின் தொடர்புகள் உள்ளன. இராணுவ புலனாய்வுத் துறையினரால்தான் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மேலும் அவர் தெரிவித்தார்.

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் கொல்லர் புளியங்குளம் மக்கள்!

(வவுனியா)

வவுனியா கொல்லர் புளியங்குளம மக்கள் தமது அன்றாட அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கடந்த 1997 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட ஜெயசிக்குறு நடவடிக்கையால் இந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து, தற்போது மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இதுவரையில் 65 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் இவர்களுக்கான போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி என்பன இதுவரை ஏற்படுத்தப் படவில்லை. இவை தவிர இங்குள்ள மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மந்த் கதியிலேயே நடைபெறுகின்றன.

இவர்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொளவதற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறைகாட்ட வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நெடுங்கேணிப் பிரதேசத்தில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு

வவுனியா வடக்கு - நெடுங்கேணிப் பிரதேசத்தில் முதியோர் தின நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா வடக்கு - நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள 60 வயதுக்கும் மேற்பட்ட முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நெடுங்கேணி பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை, நாடாளுமன்ற உறுப்பினர் கிஷோர், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆகியோர் கலந்துகொண்டு, முதியோர்களுக்கு பொன்னாடை போர்த்திப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

# லெப்டினன்ட் கேணல் விக்டரின் நினைவுநாள் நிகழ்வு மன்னாரில்!

(மன்னார்)

லெப்டினன்ட் கேணல் விக்டரின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் மன்னாரில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை மன்னார் நகரில் லெப்டினன்ட் கேணல் விக்டரின் திருவுருவப் படத்தைத் தாங்கிய ஊர்தி, மடுமாதா வளைவு சந்தியில் இருந்து ஆரம்பமாகி, மன்னார் பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். பொதுச் சுடரை மாவீரர் குடும்ப நலக் காப்பாளர் திருக்குமரன் ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்துக்கான ஈகச் சுடரை லெப்டினன்ட் கேணல் விக்டரின் தந்தை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து விக்டர் நினைவாக உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. அதன்பின் கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியிருப்புத் திட்டம் அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கேப்பாப்புலவு பகுதியில் 'எக்கோ' நிறுவனத்தின் உதவியுடன் எம்.ஆர். ஆர்.ஓ. நிறுவனத்தினரால் 'பிலவு குடியிருப்பு' என்ற குடியிருப்புத் திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான மணலாறு பகுதியை அண்டிய பிரதேசங்களான கொக்குத் தொடுவாய், கொக்கிளாய் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்காகவே இந்தக் குடியிருப்புத் திட்டம் அமைக்கப்பட்டு வருகிறதென மேற்படி நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இந்தக் குடியேற்றத் திட்டத்தில் பல வீடுகளும், மூன்று பொதுக் கிணறுகளும் நாற்பத்தைந்துக்கு மேற்பட்ட மலசலகூடங்களும் தற்போது அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தட்டுவன் கொட்டிப் பிரதேசத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

தட்டுவன் கொட்டி பிரதேச மக்களுக்கு குடிநீர் வழங்கல் நடவடிக்கையைச் சீராக்குவதற்கு உதவியாக அந்தப் பகுதியிலுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியில், மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

நீண்டகாலமாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து தற்போது விடுபட்டுள்ள இந்தத் தட்டுவன் கொட்டியின் பிரதேச அபிவிருத்திக்கென பல தொண்டு நிறுவனங்கள் தற்போது உதவிபுரிந்து வருகின்றன.

அந்த வகையில் இயக்கச்சிச் சந்தியிலிருந்து தட்டுவன்கொட்டிக் கிராமத்துக்கு குடிநீர் வழங்கும் திட்டமொன்று கிளிநொச்சி அரச அதிபரின் தலைமையில் செயல்முறைப்படுத்தப்படவுள்ளது. எனவே, இதற்கான நீர்க்குழாய்களை இயக்கச்சி சந்தியிலிருந்து புதைக்க வேண்டியுள்ளதால், இதற்கு வசதியாக அந்தப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளையே மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் அகற்றி வருகின்றனர்.

இந்தத் திட்டத்தின் மூலம் இந்தப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை முற்றாகத் தீர்க்கமுடியும் என கிளிநொச்சி பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

### திக்கம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் அமைக்க நிதியுதவி

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள திக்கம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபம் அமைப்பதற்கு நிகொட் 7 லட்சம் ரூபா நிதியுதவி அளித்துள்ளது.

திக்கம் பகுதியில் இந்தக் கிராம அபிவிருத்திச்சங்கம் அமைப்பதன் மூலம் அந்தப்பகுதி அபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (14)

# நிரந்தர கட்டடம் இன்றி இயங்கும் முள்ளிப்பற்று கிராம பொதுச்சந்தை

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக் குட்பட்ட முள்ளிப்பற்றுக் கிராம மக்கள், பொதுச்சந்தை வசதியின்றி அல்லற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இயக்கச்சி சந்திக்கருகில் அமைந்துள்ள இந்த முள்ளிப்பற்றுப் பிரதேசத்துக்கென வசதியான பொதுச சந்தை இதுவரை அமைக்கப்படவில்லை. தற்போது ஒரு சிறு கொட்டகையில் மரக்கறி வியாபாரம் மட்டும் நடைபெறுகிறது. மீன் போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் நிலையான இடவசதியின்மையால் இந்தப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்திற்கு அருகில் உள்ள கோவில்வயல், சங்கத்தார் வயல் போன்ற கிராம மக்களுக்குரிய சந்தையாக இந்த இடமிருந்தும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சைக்கிளில் வரும் வியாபாரிகளையே அந்தப் பகுதி மக்கள் நம்பியிருப்பதாகவும், இந்தப் பொதுச் சந்தைக்கென கிணறு வசதியும் செய்துகொடுக்கப் படவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்குப் பலமுறை விண்ணப்பிததும், பலனேதும் கிடைக்கவில்லையென அவர்கள் விசனம் தெரிவித்தனர். பன்னிரண்டு வருடங்களுக்குப்பின் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

### 51 அகதிகள் தலைமன்னார் வருகை

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய 51 பேரை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 51 பேரும பொலிஸார் ஊடாக மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரையும் சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதோடு, எதிர்வரும் 4 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

### பரிசளிப்பு விழா

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பரிசளிப்பு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன் காக்கும் திட்டம் மற்றும் விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் யுனிசெவ் உதவியுடன இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

### மன்னாரில் பொலிஸ் குவிப்பு!

மன்னார் பிரதேசத்தில் அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவி வருகிறது.

மதவாச்சி, அநுராதபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து அதிகளவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு மன்னார் பிரதேசத்தின் முக்கிய பகுதிகளில் காவல் கடமையில் நிறுத்தப்பட்டுள்ளதால் நகரை அண்டிய பகுதிகளில மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியுள்ளது.

### சிமெந்தின் விலை அதிகரிப்பு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிமெந்தின் விலை அதிகரித்துள்ளதால் பாவனையாளர்கள் விசனம் அடைந்துள்ளனர்.

தற்போது இந்தப் பிரதேசத்தில் ஒரு பைக்கற் சிமெந்தின் விலை ரூபா 620 முதல் ரூபா 650 வரை விற்கப்படுவதால் பாவனையாளர்கள் விசனம் அடைந்துள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சிப் பகுதியிலும் ஒரு பைக்கற் சிமெந்து ரூபா 620 மேல் விற்பனை செய்யப்பட்டு வருவதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.



குன்றும் குழியுமாகக் காணப்படும் துனுக்காய் - கொக்காவில் பிரதான வீதி.



கிளிநொச்சி கந்தசாமி கோயிலடி மதகு உடைந்து காணப்படுகிறது. இந்த வீதியால் பயணிக்கும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாவது குறிப்பிடத்தக்கது. (படங்கள் : பாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

திருக்குறள்

# நமது நோக்கு

## சொல்லவேண்டியதை சொல்லி வைக்கிறோம்

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமா அல்லது இப்படியே தொடர்ந்து இழுபடுமா - என்ற சந்தேகங்களுடன் மீண்டும் போர் ஏற்படும் சாத்தியம் உருவாகிவிடுமா என்ற அச்சமும் மக்களைக் குழப்பம் கொள்ளவைத்துள்ள இன்றய நாட்களில், இலங்கையின் இனவிவகாரம் தொடர்பான பேச்சுக்கள் பல்வேறு நாடுகளில் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இது ஒரு விசித்திரமான நிலைமையேயாகும்.

சமாதானம் தொடர்பாக நேருக்கு நேர் அமர்ந்து பேச வேண்டியவர்கள், இன்னமும் அப்படி ஒரு பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்கான காலதேச வர்த்தமானம் சரிப்பட்டு வராத நிலையில் - தேசம்தேசமாகத் திரிந்து பேச்சு வார்த்தைபற்றிய பேச்சுக்களை நடத்திவருவதைப் பார்க்கும்போது, எல்லாமே ஒரு ஏமாற்றுத்தனமோ, காலம் கடத்தும் நடவடிக்கையோ என்ற எண்ணம் ஏற்படுவதையும் தடுக்க இயலாமல் இருக்கிறது.

ஒவ்வொரு சந்திப்பின் போதும் ஒவ்வொரு தரப்பினரும் விடும் அறிக்கைகளும், கருத்துக்களும், பொதுமக்களை குழப்பும் தன்மையைக் கொண்டவையாக உள்ளனவே தவிர ஆக்கபூர்வமான நம்பிக்கை எதனையும் தருபவையாக இல்லை என்றே கூறவேண்டும். உள்நாட்டில் அரசியல் தலைமைகளிடையே கருத்தொருமைப்பாடு ஏற்படாதவரை, அரசியல் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படாதவரை - இனப்பிரச்சினையை ஜனநாயகப்பண்புடனும், மனோதர்மத்துடனும் மனிதநேயதுடனும் அனுகும் நாகரிகம் சிங்களத்தலைமைகளுக்கும் பௌத்த மதபீடங்களுக்கும் ஏற்படாதவரை தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை தற்போதைய அரசியல் மூலோபாயங்களுடன் கூடிய பேச்சுவார்த்தைகள் மூலம் நியாயமான முறையில் தீர்த்துவிடலாம் என எவரும் நம்பினால், அவர்கள் இலங்கையின் அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்களாகவே இருப்பர்.

சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் - பேச்சுக்கள் ஆரம்பிக்காவிடின் அது யுத்தநிறுத்தத்தைப் பாதிக்கும் என்றார் உண்மைதான்.

ஆனால், வெறும் யுத்தநிறுத்தத்தைப் பாதுகாப்பதன்மூலம் சமாதான்நிலையை உருவாக்கிவிடமுடியுமா? இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிடமுடியுமா? யுத்தநிறுத்தமே பிரச்சினைக்குத் தீர்வாகிவிடமாட்டாது என்ற உண்மையை சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்துகொள்வது அவசியம்.

இன்றய யுத்தநிறுத்த சூழலை ஏற்படுத்தி, சமாதான முயற்சிகளுக்கு பாதை அமைத்தவர்கள் விடுதலைப்புலிகள்தான். அரசு, அதற்கு அடுத்தபடியாக அதைத் தொடரமுன்வந்தமை அது அப்போதய அரசியல் தேவையாகவும் இருந்தமையால் தான் என்பதையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

அரசினதும், அரசபடைகளினதும் எரிச்சலூட்டும் நடவடிக்கைகளுக்கும், சிங்களப் பேரினவாதிகளின் சமாதான விரோத போர்வெறிக்கூச்சலுக்கும் மத்தியில் - யுத்தநிறுத்தத்தை புலிகள் தொடர்ந்தும் பேணுவதற்கு, சர்வதேச சமாதான முயற்சிகள் மீது வைத்துள்ள மதிப்பே காரணம். இலங்கையரசின் மீதான நம்பிக்கை என்பது தமிழ்மக்களுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் பூச்சியமேயாகும்.

இலங்கை இனவிவகாரத்தில் நேர்மையான அனுசரணையாளராக, பல்வேறு அவமதிப்புகளுக்கு மத்தியிலும் பணியாற்றும் நோர்வேயுடன் - அதன் கடும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பினை வழங்கமுடியாத சிங்களத் தலைமைகள் -

இந்தியாவைப் பங்காற்ற அழைக்கிறார்கள்.

பிரிட்டனை உதவிசெய்யக் கோருகிறார்கள்,

கனடாவைக் கைநீட்டி கூப்பிடுகிறார்கள்.

இன்னும் யார்யாரையோ எல்லாம் உதவிக்காக ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுகிறார்கள்.

அவர்களும் அவரவர் அரசியல் நிலைகளில் நின்று கருத்துக்களை கூறுகிறார்களேயொழிய - சமாதானத்தை வலியுறுத்துகிறார்களேயொழிய அரசியல் தீர்வுக்கான நியாயமான, தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலான தீர்வொன்றை முன்வைக்கிறார்களா என்றால் இல்லை...

ஆனால், சந்திப்புகள், பேச்சுக்கள், கருத்துவெளியிடுதல்களுடன் அனைத்துமே முடிந்துபோக பிரச்சினைகளுக்கு முடிவெதுவும் காணப்படுவதாக இல்லை இதுவே அவலமான விடயம்.

பாதிப்புற்ற, பாதிக்கப்படுகின்ற அப்பாவித்தமிழர்களின் அரசியல், வாழ்வியல் பிரச்சினைகளுக்கு எந்தவொரு வல்லாதிக்க சக்தியும் சரியான நியாயமான தீர்வை முன்வைப்பதாக இல்லை. இந்தியா சமாதானத்தை ஆதரிப்பதாகக் கூறிக்கொள்ளும் அதேவேளையில் - தான் விரும்பும் தீர்வொன்றைத் திணிக்க விரும்பும் நியாயமற்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவே முனைகிறது.

இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வு தமிழர்களின் நலனை அடிப்படையாகக்கொண்டதாகவே அமைய வேண்டும். இதில் இரு வேறு கருத்து இருக்கவேமுடியாது.

மாறாக அமெரிக்க நலன், இந்திய நலன் பேரினவாத சக்திகளின் விருப்பம், வேறுசில நாடுகளின் அபிலாஷை என பல்வேறு நாடுகளின் குழுக்களின் சுயநலஅபிலாஷைகளை தீர்க்கும் நோக்கில் - இலங்கையின் இனப்பிரச்சினையை எவரும் தீர்க்க முற்பட்டால் அதற்கேற்ப இலங்கையரசும் செயற்பட முயன்றால் இந்த நாட்டை இவர்கள் அனைவருமே - அனைத்து சக்திகளுமே அவலப்புதைகுழிக்குள் தள்ள முனைகிறார்கள் என்றே அர்த்தமாகும். இந்த நிலையில் யோசித்து செயற்படவேண்டியது அதிகார வலுவற்ற இலங்கை அரசல்ல... சர்வாதிகாரம் பொருந்திய ஜனாதிபதிதான்.

# நாடும் நடப்பும்




# காணாமற் போனோர் விவகாரம் யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பான எட்டு வழக்குகள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ் வரதராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த இரண்டு வழக்குகளில் காணாமற்போனவர்களாக குறிப்பிட்டிருந்த நாவற்குழியைச் சேர்ந்த சிவகுரு தங்கத்துரை, பொன்னையா ஜெயராஜா ஆகியோர் வழக்குகளில் எதிர்மனுத்தாரர்களாக குறிப்பிடப்பட்டிருந்தனர். குறித்த காலத்தில் நாவற்குழி இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாக இருந்த லெப்டினன்ட் கேணல் டுமிந்த கெப்பிற்றிவலான, அப்போதைய இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோர் சார்பில் அரச சட்டவாதி ஆட்சேபனை மனுக்களைத் தாக்கல் செய்தார்.

இதனை அடுத்து மனுத்தாரர்கள் சார்பில் சட்டத்தரணி எம்.றெமிடியஸ்சின் அனுசரணையுடன் ஆஜரான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தியும், சுகந்தி கந்தசாமியும் தங்கள தரப்பு வாதங்களை சமர்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டு ஆட்கொணர்வு மனுக்களிலும் காணமற்போனதாக குறிப்பிடப்பட்ட நபர்கள் குறித்து முதற்கட்ட வழக்கு இருப்பதாக நீதிமன்றம் திருப்தி அடைவதன் காரணமாக, இந்த வழக்குத் தொடர்பான முழு விசாரணையும் மேற்கொள்வதற்கு சாவகச்சேரி நீதிவானுக்கு அனுப் பும்படியும், வழக்குகள் முடிவடைந்ததுடன் அது பற்றிய அறிக்கை யொன்றை யாழ்.மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்குமா றும் சாவகச்சேரி நீதிவானுக்கு கட்டளையிட்டார்.

ஏனைய ஆறு வழக்குகளில் எதிர் மனுத்தாரர்களான தம்பன் பாஸ்கரன், பற்றிக் மேரி ரவி, தேவதாஸ் சுரேஸ்குமார், செல்லையா பரமநாதன், செல்லத்துரை குமார், ஆறுமுகம் சிவாஜினி ஆகியோர் சார்பில் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்காக வழக்குகளை டிசெம்பர் 6 ஆம் திகதி நீதிபதி ஒத்தி வைத்தார்.

# 85 ஆயிரம் குடும்பங்களுக்கு உலக வங்கி உதவித் திட்டம்!

(கொழும்பு)

இலங்கையின் 12 மாவட்டங்களிலுள்ள 85 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவி வழங்கும் அபிவிருத்திச் செயற்திட்டமொன்று உலக வங்கியால் ஆரம்பிக்கப்பட்டது.

உலக வங்கியின் பிரதிநிதிகள் 5 பேர்கொண்ட குழுவினர் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் கடமையாற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு வவுனியா அரச அதிபர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடத்திய கலந்துரையாடலின் போதே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ஆறுவருட செயற்திட்டத்தின் பொருட்டு உலகவங்கி 8 ஆயிரம் மில்லியன் ரூபாவைச் செலவிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

வடக்கு - கிழக்கிலுள்ள பிரதான 8 மாவட்டங்களைத் தவிர மேலதிகமாக அனுராதபுரம், பொலனறுவை, புத்தளம், மொனறாகல ஆகிய மாவட்டங்களும் இந்த அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

உலகவங்கியின் தெற்காசிய வலயத் திட்டத்தின் பொறுப்பிலுள்ள உலகவங்கிப் பிரதிநிதி 5 பேர்கொண்ட குழுவின் தலைவர் நிகல் பெரோ நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு இந்திய இனத்தவர் இருவரும், அமெரிக்கா நாட்டினர் இருவரும் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த 12 மாவட்டங்களிலிருந்து 600 கிராமப் பிரதேசங்கள் உலக வங்கியின் செயற்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி அடையவுள்ளன.

உலகவங்கியின் மூலம் கடந்த வருடம் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் 405 குளங்கள் புனரமைக்கப்பட்டதோடு, 1200 கிலோ மீற்றர் தூரம் பெரும் தெருக்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

இதில் குடிநீர் வழங்கும் கிணறுகள் 300, நீர் செயற்திட்டம் 109, இந்தப் பிரதேசங்கள் - இந்தச் செயற்திட்டங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டதாகவும், வவுனியா அரச அதிபர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் அரச உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (தே)

## யாழ்.திறந்த பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர்களுக்கு கொடுப்பனவுகள் இல்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.திறந்த பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர்கள் மற்றும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 2003 ஆம் ஆண்டில் கடமையாற்றியவர்களுக்கே இதுவரை வேதனம் வழங்கப்படவில்லை எனவும், இது தொடர்பாக யாழ்.திறந்த பல்கலைக்கழக பிராந்திய இணைப்பாளர் தலைமை அலுவலகத்துக்கு பல கடிதங்களை எழுதியும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

கொடுப்பனவுகளை உரியவர்களுக்கு வழங்குவதுடன் தொடர்ந்து நியமனங்களை வழங்கி விரிவுரைகள், பரீட்சைகளை நடத்துவதற்கும் உரியகாலங்களில் கொடுப்பனவுகளை பூரணமாக மேற்கொள்வதற்கும் சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென திறந்த பல்கலைக்கழகத்தினர் தெரிவித்தனர்.

## அப்துல் காதரை விடுவிக்குமாறு பிக்குகள் குழு கோரிக்கை

ஊழல் மோசடி குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கபபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதரை விடுவிக்குமாறு பௌத்த பிக்குகள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

அஸ்கிரிய மகாநாயக்க தேரர் உடுகம சிறி புத்தரகித்த தேரர் தலைமையிலான 300 பௌத்த பிக்குகள் கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சர் அப்துல் காதர், சிறந்த மனிதரெனவும், மக்களுக்காக அர்பணிப்புடன் செயற்படும் அரசியல்வாதியெனவும் தெரிவித்துள்ள பௌத்த பிக்குகள், அவரை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

## மண்டபம் அமைக்க நிதியுதவி அளிப்பு

பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவிலுள்ள திக்கம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் அமைப்பதற்கு நிகொட் 7 லட்சம் ரூபா நிதியுதவி அளித்துள்ளது,

திக்கம் பகுதியில் இந்த கிராமஅபிவிருத்திச் சங்கம் அமைப்பதன்மூலம் அப்பகுதி அபிவிருத்திகளை முன்னெடுக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுப் படகுப் பிரயாணிகள் இலங்கை அரசினால் கைவிடப்பட்ட அனாதைகளா?

நக்கீரன்

இலங்கையின் எப்பாகமுமே ஏ.பி. எச்.உ.ஈ வகுப்புப் பாதைகளால் இணைக்கப்பட்டுள்ளது. அந்தக் காரணத்தால் மக்கள் இலங்கையின் எந்தப் பாகத்துக்குமே பிரயாணஞ் செய்யும் சாத்தியமுண்டு. ஆனால், யாழ்ப்பாண மாவட்டத்தின் ஓர் பகுதியாகிய நெடுந்தீவு கடலினால் சூழப்பட்டுள்ளமையால் அவ்விதம் இணைக்கப்படவில்லை.

அமைக்கப்பட்டதால், மோட்டார் படகுச்சேவையும் இந்தத் துறைமுகத்திலிருந்து செயற்படுகின்றது.

அண்மையில் கலவரங்கள் ஆரமபமாகியதும் நெடுந்தீவுக்கும் ஏனைய தீவுகளுக்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட மோட்டார் படகுகளான அலையரசி, வடதாரகை, மணிமேகலை, வலம்புரி என்னும் நான்கு படகுகளும் பாதுகாப்புக் கருதி - களின் பின்னர் - முப்பத்துநான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வீதி அதிகாரசபைக்குக் கையளிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு முப்பத்தாறு பயணிகளின் படுகொலைக்கும் களமாகியதும் இந்தப் படகுதான்.

முரண்பாடுகளுக்கு முன்னைய சமாதான உடன்படிக்கையின் பின்னர் - இந்தப் படகு திருத்த வேலைகளின் பின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. ஆனால், அப்படகு முன்னர் ஐந்து மாதங்களுககும், மீண்டும் பதினொரு மாதங்களுக்கும் திருத்த வேலைகளுக்காகச் சென்றது. சென்ற வாரம்தான் மீண்டும் சேவையிலீடுபட்டது. இந்தப் படகு மிகவும் பழமை வாய்ந்த தொன்றாகையால் இதன் தொடர் சேவை ஐயப்பாட்டுக்குரியதே.



பழைமை வாய்ந்த குமுதினியின் பதில் சேவைக்காகவும், காரைநகர் கடற்படை முகாமில் நிறுத்தி வைக்கப்பட்டு மீளப்பெறமுடியாமல் இழந்த படகுகளை ஈடுசெய்யும் நோக்கிலும், புதிய இரண்டு மோட்டார் படகுகளில் மட்டும் பணிகள் நடைபெறுவதாக யில்லை. அந்த மாவட்டத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் கேட்கலாம். ஆனால், இதுவரை எவருமே வாய்திறக்கவில்லை. பிரயாணிகள் பலவித இன்னல்களை அனுபவித்தவண்ணம் உள்ளனர்.

அரசாங்க மோட்டார் படகுகள் சேவையில் இல்லாத காலங்களில், மக்கள் பிரயாணிகளைக் கொண்டு செல்வதற்கு - அனுமதியற்ற பொதியேற்றும் வள்ளங்களில் பயணிக்க வேண்டியுள்ளது. இவற்றில் இருக்கையோ வேறு வசதிகளோ கிடையாது. பயணிகள் கடல் நீரில் நனைந்து தோய்ந்துதான் பயணத்தை முடிப்பார்கள். ஆபத்து வேளைகளில் உயிர்காக்கும் உபகரணங்கள் கிடையாது. அண்மையில் ஒருவர் இந்த வள்ளப் பிரயாணத்தில் உயிரிழந்த சம்பவமும் நடந்தது.

பயணிகளின் எண்ணிக்கையும், கட்டுப்பாடற்றது. பிரயாணக் கட்டணமும் வரையறுக்கப்படாத்து. ஏ.பி. பாதையைப் பாவிப்போர் கட்டணமெதையும் செலுத்துவதில்லை. மட்டுமே நிதியுதவி செய்வதாகவும் 'மோட்டார் படகு' பாதையல்ல எனவும் கூறிவிட்டனர்.

நெடுந்தீவில் நிரந்தரமாகச் சுமார் 6000 பேர் வசிக்கின்றனர். ஆனால், 13000 பேர் வரை பிரயாணம் செய்கின்றனர். பிரயாணிகள் அந்தத் தீவு மக்கள் மட்டுமல்ல, குடியேற்றத் திட்டங்களில் வசிப்போர், அரசாங்க உத்தியோகத்தர், உல்லாசப் பிரயாணிகள் முதலானோரும் அடங்குவர். எனவே, நெடுந்தீவுப் படகுப் பிரச்சினை அரசால் உதாசீனப்படுத்தக் கூடியதொன்றல்ல.

ஓர் பிரதான பாதை சேதமடைந்து போக்குவரத்துத் தடைப்பட்டால், உரியவர்கள் உடனே நடவடிக்கையை மேற்கொள்கிறார்கள். ஆனால், நெடுந தீவு மோட்டார் படகு பிரச்சினையில் ஏன் அவர்கள் அக்கறை எடுப்பதில்லை? ஏனோதானோ என்ற நிலைதானே!

நெடுந்தீவுப் படகுச்சேவை ஓர் பாதை என்பதை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது.

அநதப் படகுச்சேவை நெடுந்தீவு மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட தொன்றல்ல. முன்னர் குறிப்பிட்டது போல படகுப் பிரயாணிகள் அனைவருக்குமே உரித்தான தொன்று.

எனவே, அனைத்து இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுமே

நெடுந்தீவையும் இலங்கையின் ஒரு பாகமாகக் கருதி, அதனையும் புறக்கணிக்கக்கூடாதெனக் கருதி பிரிததானிய அரசு பாதைக்குப் பதில் மோட்டார் படகுப்பாதை எனப் பிரகடனப்படுத்தி, ஓர் மோட்டார் படகையும் ஊர்காவற் துறையிலிருந்து நெடுந்தீவுக்குச் சேவையில் ஈடுபடுத்தியது.

இதை நடாத்தும் பொறுப்பை ஏ.பி பாதைகளுக்குப் பொறுப்பான பகிரங்க வேலைப்பகுதியினருக்குப் பாரங்கொடுத்தனர். தற்போது பகிரங்க வேலைப் பகுதி - வீதி அதிகார சபையாக மாறிவிட்டது. புதிய துறைமுகமொன்று குறிகாட்டுவானில் காரைநகரிலுள்ள பல காட்டுக் கடற்படைத்தளத்தில் நிறுத்தப்பட்டன.

இயந்திரக் கோளாறு காரணமாக ஓட்டமுடியாத குமுதினி என்னும் படகு மட்டும் நெடுந்தீவில் நிறுத்தி வைக்கப்பட்டது. சமாதான உடன்பாட்டின் பின்னர் சேவையிலீடுபடுத்தும் தேவையேற்பட்டபோது, கடற்படைத் தளத்தில் நிறுத்தப்பட்ட எந்தப் படகையுமே மீளப் பெறமுடியவில்லை. குமுதினி மட்டும் சில பாக இழப்புகளோடு எஞ்சியிருந்தது.

குமுதினிப் படகு அதி பழமை வாய்ந்தது. இது பல ஆண்டு சேவை அதிகாரிகள் மக்களுக்கு அடிக்கடி கூறிவந்தனர். ஆனால், அவை இதுவரை சேவைக்குக் கிடைக்கவிலலை. அந்தப் படகுகளை வேலை முடிந்ததும் வீதி அதிகாரசபையினரிடம் கையளிக்க முன்னரே வேறு பகுதியினர் எடுத்துச் சென்றுவிட்டனரெனப் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

இதன் உண்மை நிலையை மக்களால் கண்டறியமுடியாதுள்ளது. முன்னைய தேர்தல் முறையின்படி தீவுப்பகுதிக்கென ஓர் நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தார். அவர் மூலம் இப்படியான நிலைப்பாடுகளை தட்டிக்கேட்கலாம். இப்போது அப்படி நெடுநதீவுப் பயணிகள் மட்டும் ஏன் வரையறுக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தவேண்டும்? யார் கேட்பது?

குமுதினிப் படகு அதிக காலம் திருத்த வேலைகளால் ஓடாத நிலையிலிருந்தபோது, வீதி அதிகார சபைக்குப் பொறுப்பான பிரதம மந்திரியை ஓர் புதிய படகைப் பெற்றுத் தரும்படி கேட்டபோது, குமுதினி திருத்தப்படுவதால் வேறு படகைத் தரமுடியாதெனக்கூறிவிட்டார்.

கொழும்பிலுள்ள உலகவங்கி நிதிக்குப் பொறுப்பான அதிகாரிகளிடம் கேட்டபோது, தாங்கள் பாதிக்கப்பட்ட பாதைகளைச் செப்பனிட அக்கறை எடுக்கவேண்டிய ஓர் முக்கிய விடயம். பொது மக்கள் அவர்கள் எல்லோரையுமே கேட்டும் சாத்தியமில்லை.

எனவே, இந்த விடயத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாவது இதைத் தங்கள் கவனத்தில் எடுத்து, ஆவன செய்யுமாறு நெடுந்தீவு மோட்டார் படகுப் பிரயாணிகளின் சார்பில் வேண்டிக்கொள்ளுகிறோம்.

நெடுந்தீவுப் படகுப் பிரயாணிகளைத் தொடர்ந்தும் அரசியல் அனாதைகளாக்காதீர் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள். ◆

# வெற்றிகரமான மனித வாழ்க்கைக்கு உளநலம் என்பது இன்றியமையாதது!

மேனன்

இந்தப் பூவுலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனித வர்க்கமும் சந்தோசமான, சுபீட்சமான, ஒரு நிம்மதியான வாழ்க்கையைத்தான் எதிர்பார்த்து வாழ்கின்றனர்.

இந்த எதிர்பார்ப்புகள் ஆசைகளை சுமந்து வாழ்கின்ற மனித வர்க்கத்துக்கு - எதிர்பாராத துன்பங்கள் வந்து வாட்டுகின்றன. இன்பங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் எம்மவர்களால், துன்பங்களை ஜீரணிக்கமுடியாமல் போகிறதே.

அது ஏன்? உடல் நலத்தில் அக்கறைகாட்டுகின்ற மனித வர்க்கம் - உள நலத்திலும சற்றேனும் அக்கறை காட்டாமல் இருப்பதால்தான் இந்தத் துன்பங்கள் ஜீரணிக்கமுடியாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது.

ஒவ்வொரு வெற்றிகரமான மனித வாழ்க்கைக்கும், உளநலம் என்பது இன்றியமையாததொன்று. இதனால் தான் - இதனை நினைவுபடுத்தும் முகமாக, ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி உலக உளநலம் என்ற தினம் என்ற ஒன்று அறிமுகமாகியது. ஆகவே, இதன் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் - இதற்கிடையில் எத்தனை படிமுறை வாழ்க்கைகளை சந்திக்கிறோம். குழந்தைப் பருவத்தில் மழலை மொழிகளோடும் நுண்ணறிவு வளர்ச்சித் தூண்டுதல்களோடும், பாலுறுப்பு சுய இன்ப இச்சைகளோடும் ஆரம்பித்த உளநிலை புலன் இயக்கப்பருவம் தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம், தூலசிந்தனைக்குப் பிற்பட்ட பருவம், நியம சிந்தனைப்பருவம் என்ற முறைகளையெல்லாம் தாண்டி- கட்டிளமைப் பருவத்துக்கு வந்து பின்பு திருமணப்பருவம் முதுமைப் பருவம், என்று பல படிகளைத் தாண்டி வாழ்வை நிறைவுசெய்கிறோம்.

இதற்கிடையில் எத்தனை நிறைவு செய்யப்படாத தேவைகளால் இம்சைப்படுகிறோம். எத்தனை முரண்பாடுகள், பிரச்சினைகளால் அவதிப்படுகிறோம். முகங்கொடுக்கமுடியாத சில முட்டுக்கட்டை உளநிலைகளால் வாழ்வை வெறுத்து ஒதுங்கி வாழ்கிறோம். சம்பாதிக்கவேண்டிய மனித உறவுகளை சட்டென்று வருகின்ற சில வாத்தைகளால் சமாளிக்க முடியாமல் முறித்தெறிகிறோம்.

வாழ்ந்தோம் என்று வரைவிலகணம் கூறும் நாங்கள் - எப்படி வாழ்ந்தோம் என்று கூறத் தயங்குகிறோம். இதற்கெல்லாம் அடிப்படை என்ன? உளநிலை எம்மில் சீர்செய்யப்படாமல் இருப்பதே காரணம்.

இந்த வாழ்வானது எமக்குக் கிடைக்காத ஒரு செல்வம். இந்தச் செல்வத்தை சந்தோசம் என்கின்ற உளநிலையின் ஊடாக வழிநடத்தாமல், தேவையற்ற முரண்பாடுகளால் வாழத்தெரியாது போட்டுடைக்கிறோம். இவைதான் பட்டணத்தார் மிகவும் அழகாகச் சொல்கிறார்.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி
நாலாறு மாதமாய் ஓர்
குயவனைவேண்டி
கொண்டுவந்தாண்டி ஒரு தோண்டி
அதைக் கூத்தாடி கூத்தாடி
போட்டுடைத்தாண்டி"

ஆகவே, எமக்கு உளநலன் ஏற்படக்கூடிய வகையில் எமது வளத்தை சீர் செய்யக்கூடிய பயிற்சிகளை நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

### தியானப் பயிற்சி

இது யோகாசனப் பயிற்சியின் ஒரு அம்சமாகும். இதில் பல பிரிவுகள், பல அம்சங்கள உண்டு. அதை விடுத்து எமது வேலைப்பழுக்களோடுகூடி, பெரிய பெரிய அம்சங்களை நிறைவேற்றமுடியாமல் போனாலும், சாதாரண அரை மணிநேரத் தயானத்தை செய்வதிலிருந்து யாரும் தவறக்கூடாது. ஒரு மெழுகுதிரியைக் கொழுத்தி நடுவட்டக் கழுத்துப் பகுதியை உற்று நோக்கிய வண்ணம் வேறு சிந்தனைக்குச் செல்லாது, அதையே நினைத்தவண்ணம் இருப்பது சாதாரணமாகப் போதுமானது.

முதலில் 5 நிமிடம் இருப்பதே மிகவும் கடினமாக இருக்கும். பின்பு நாள்வர நாள்வர அது பத்துநிமிடமாகி, 15 நிமிடமாகி பின்பு எமக்கே நேரம் தெரியாத வண்ணம் செய்யத் தூண்டும் இதைவிட, ஒரு முக்கோணத்தில் ஒரு புள்ளியை அமைத்தும் செய்யலாம் அல்லது இறைவன் திருவுருவத்தின் உள்ளக்கலசத்தில் ஒரு புள்ளியை வைத்துச் செய்யலாம்.

ஆனால், ஏதோ ஒன்றை மாத்திரம் நினைத்தவண்ணம் செய்யவேண்டும். செய்த அன்றைய நாளிலே உங்கள் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தை நங்களே உணர்வீர்கள். இதுசாதாரண மாக மேற்கொள்ளப்படவேண்டிய தொன்று. தவறு இழைக்காதவன் என்று ஒருவனும் இல்லை. ஆனால், அந்தத் தவறுகளிலிருந்து திருத்திக்கொள்ளும் மனநிலை உளமாற வேண்டும். இதுதான் முக்கியம்.

ஒருமுகப்படுத்தப்பட்ட ஒரு தியானம் ஆகும்.

### நடத்தைக்கோலத்தை மீட்டுப் பார்த்தல்

இது எல்லோராலும் சாதாரண மாக மேற்கொள்ளப்படவேண்டிய தொன்று. தவறு இழைக்காதவன் என்று ஒருவனும் இல்லை. ஆனால், அந்தத் தவறுகளிலிருந்து திருத்திக்கொள்ளும் மனநிலை உளமாற வேண்டும். இதுதான் முக்கியம்.

அனறாடம் நாம் படுக்கைக்குச் செல்லும்போது, இன்று நாம் சந்தித்த அம்சங்கள் என்ன, அந்த அம்சங்களுக்கு - நான் எடுத்துக் கொண்ட முடிவுகள் சரியானதா? தவறானதா? எனது மனச்சாட்சிக்குத் துரோகமாக நடந்து கொண்ட சம்பவங்கள் என்ன? இனிவரும் காலஙகளில் எவ்வாறு நாம் நடந்து கொள்ளவேண்டும் என்று - அரை மணி நேரம் சிந்தித்துவிட்டு, படுக்கைக்குச் செல்வோமானால் எமது அனுபவங்களே எமக்கு ஒரு ஆசானாகி, எம்மை வளப்படுத்திக்கொண்டிருக்கும்.

### ஆலோசனை வழிகாட்டல் நிலையங்களை இடையிடை நாடுதல்

பிரச்சினைக்குரிய காரணங்களை இனங்காண்பது சுலபம். ஆனால் மனித முரண்பாடுகளுக்குரிய தீர்வுகளைச் சாதாரண உளநிலை கொண்ட எம்மால் கண்டறிவது கடினம்.

ஆகையால், இதற்கு ஆலோசனை, வழிகாட்டல் நிலையம் மிகவும் அவசியம். ஏனெனில், பிரச்சினையில் சரியான நியாயம் ஒரு வளம் மாத்திரம் இருக்கும். ஆகவே, அதைக் கண்டறிவது, தீர்ப்பது சுலபம். ஆனால், முரண்பாடுகளை எடுத்துக்கொண்டால் அதில் சரியான நியாயங்கள் இருபுறமும் இருக்கும். ஆகவே அது தீர்ப்பது கடினம். ஆகவே, ஆலோசனை தேவை. மன நெருக்கீடுகள், நெரிசல்களோடு இருக்கின்றபோது நிச்சயம் எம்மால் ஆலோசனையின்றி சரியான முடிவுகளை எடுக்கமுடியாது. ஆகவே, ஆலோசனை என்பது இன்றியமையாததொன்று.

இதற்காகத்தான் எமது சமூகத்தின் மத்தியில் சாந்திகம் என்னும் உளநல நிலையம் உண்டு. மற்றும் இதுபோன்ற வேறு வைத்தியநிலையங்களும் உண்டு. இதில் தேவையான உளநல ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகவே, உடல் ஆரோக்கியத்துடன் வளரும் நாங்கள் - உள ஆரோக்கியத்தையும் பேணிப்பாதுகாப்பதன் ஊடாக, பூரண ஆளுமை கொண்ட மனிதர்களாகப் பரிணமிக்கலாம். அன்றாடம் எமது நிதானமற்ற ஆளுமைப் பண்புகளால் எத்தனையோ தவறுகளை இழைக்கிறோம்.

இது எமது உளநல சீர் இன்மையாலேயே ஏற்படுகிறது. மற்றவர்களிடம் இருக்கின்ற பாதகமான அம்சங்களையே நித்தமும் விமர்சிக்க முற்படுகிறோம். உண்மையிலேயே இது தவறு.

யாரையுமே விமர்சிக்க எமக்கு உரிமையில்லை. ஒருவரை இனம் காணவேண்டுமென்றால், சாதக பாதக அம்சத்தை உற்றுநோக்கி, அதற்கூடாக நியாயத்தை முன்வைக்க வேண்டும். எல்லோரது ஆளுமைப் பாங்கிலும், பாதகமான அம்சங்கள் நிச்சயம் இருக்கும். அதன் விகிதத்தைத் தான் இனம்காண வேணடும்.

எம்மிடம் இருக்கின்ற சிறு குறைகளைக்கூட ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு விவகார மனநிலை வருகிறது.

அதுவும் ஒரு பெரிய உளநலக் குறைபாடுதான். ஒரு பிரச்சினை வருகிறபோது முதலில் அந்தப் பிரச்சினையில் நாம் விட்ட தவறுகள் என்ன என்று தான் பார்க்க வேண்டும்.

அதை முன்வைத்து, முரண்பாட்டைக் குறைக்க வேண்டுமே தவிர, மற்றவர்களது தவறுகளை இனங்காட்டி, முரண்பாட்டைக் கூட்டக்கூடாது.

இவையெல்லாம் எமக்கே தெரியாது, எமக்குள் இருக்கின்ற உளநலக் குறைபாடுகள்தான்.

இதனை மேற்சொன்ன பயிற்சியின்மூலம் சீர் செய்வோமானால், பூகம்பமான எமது வாழ்க்கை பூஞ்சோலையாக மாறும். ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் படையினரின் தாக்குதல் காஸாவின் வடபகுதிக்கும் நீடிப்பு!



காஸாவின் வடபகுதி நகர்மீது இஸ்ரேல் படையினர் தமது தாக்குதல் எல்லையை மேலும் விரிவுபடுத்தியுள்ளனர். இதன் மூலம் அவர்கள் காஸாவின் பீர்லாகியா என்ற நகரத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

இவ்வாறு இந்த நகர்ப்பிரதேசத்தினூடாக இஸ்ரேல் படையினர் முன்னேறிச் சென்றவேளை உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டுகள் மற்றும் தாங்கி எதிர்ப்பு எறிகணைகள் மூலம் தாக்குதலுக்கு இலக்கானதாக இஸ்ரேலியப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

லாகியா என்ற நகரத்தின் மீது இஸ்ரேல் ஹெலிகொப்ரர்கள் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினரான மொகமட் மஃறூப் (வயது 22) கொல்லப்பட்டதாக பலஸ்தீன வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதனிடையே இஸ்ரேல் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொன்யூனுஸ் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த பலஸ்தீன சிறுமியான காதிர் மொக்கீமெர் (வயது 11) என்பவர் கொல்லப்பட்டார்.

இந்தப் பகுதிகளில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பெயர் - ஒப்பரேசன் பெனிற்றன்ஸ் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதன் நோக்கம் இப்பகுதிகளிலுள்ள உள்ளூர் வெடிகுண்டுகளை அழிப்பதுதான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காஸாவின் மேற்குக்கரைப் பகுதியில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினரொருவர் இஸ்ரேல் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்த அமைப்பின் உறுப்பினரான இமாட் குவாசமா என்பவர் கட்டடம் ஒன்றுக்குள் மறைத்திருந்தவேளை, அந்தக் கட்டடத்தை சுற்றி வளைத்த படையினர், அவரை உள்ளாடையுடன் மட்டும் வெளியே வருமாறு அறிவித்தனர். இதன்பின்னர் அவர் வெளியேவர அவரது கண்களைக் கட்டிய படையினர் அவரைக் கைதுசெய்து அழைத்துச் சென்றனர்.

இதனையடுத்து அந்தக் கட்டடத்தை இஸ்ரேலிய புல்டோசர்கள் இடித்து தரைமட்டமாக்கியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

# ஈராக்கின் வடபகுதி ஹாத்ரா நகரில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிப்பு

சதாம்ஆட்சியின்போது கொன்று புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் எனச்சந்தேகிக்கப்படும் ஒன்பது புதைகுழிகள் ஈராக்கின் வடபகுதி நகரமான ஹாத்ராவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் புதைகுழிகளில் சிறுவர்கள் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோரின் எலும்புக்கூடுகள் உள்ளதாகவும் இவை சதாம் ஆட்சிக்காலத்தின்போது கொல்லப்பட்ட குர்திஷ் இனமக்களுடையதாக இருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதைகுழிகளிலிருந்து கருவிலேயே அழிக்கப்பட்ட குழந்தைகளின் எலும்புக்கூடுகள், விளையாட்டுப்பொருட்களை அணைத்தபடி உள்ள குழந்தைகளின் எலும்புக் கூடுகள் மற்றும் தாய் குழந்தையை அணைத்தபடி உள்ள குழந்தைகளின் எலும்புக்கூடுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

ஏனது தனிப்பட்ட கருத்தின்படி இது ஒது மரணவயல் எனத்தெரிவித்தார். இந்தப் பகுதியில் புதைகுழிகளை தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கரான இரேக்கீ



கோய்.

சதாம் ஆட்சிக்காலத்தில் பிடிக்கப்படும் பலர் ஏற்கனவே கொல்லப்பட்டபின்னர். இப்பகுதிக்கு கொண்டுவந்து புதைக்கப்பட்டிருக்கலாம், மற்றும் பலர் இப்பகுதிக்கு கொண்டுவந்தபின்னர். கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு புதைகுழியில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் எலும்புக் கூடுகளும் மற்றயதில் ஆண்களின் எலும்புக் கூடுகளும் காணப்பட்டன. பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ள புதைகுழியில் ஒருதாய் தனது குழந்தையை அணைத்தபடி கிடக்கும் எலும்புக்கூடு காணப்பட்டது. இதில் குழந்தையின் பின்பக்கத்தலையிலும் தாயின் முகத்திலும் துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

போல்கன் பிராந்தியத்தில் நான் புதைகுழிகள் தொடர்பாக ஆய்வு செய்த போது அங்கு போர்புரியும் வயதை ஒத்தவர்களது எலும்புக் கூடுளே கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் ஈராக்கில் அது மிகவும் மாறுபாடாக உள்ளதெனத் தெரிவித்தார்.கியோய் என்ற ஆராய்ச்சியாளர்

சதாமின் ஆட்சிக்காலத்தில் ஈராக்கில் மூன்று இலட்சம் மக்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் இது தொடர்பான விசாரணைகளை நடத்த ஐரோப்பிய நாடுகளின் விசாரணையாளர்கள் இதில் ஒத்துழைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் புதைகுழிகள் போல் 40 புதைகுழிகள் ஈராக்கில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஈராக்கின் மனித உரிமை அமைச்சு தெரிவித்தது.

# சூடானில் ஒருமாத வன்செயலால் 2 லட்சம் மக்கள் இடப்பெயர்வு!



கடந்த ஒருமாத காலமாக சூடானில் இடம்பெற்றுவரும் வன்செயல்களால் சுமார் இரண்டு இலட்சம் மக்கள் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், பாதுகாப்பின்மை காரணமாக 15 இலட்சம் மக்களுக்கான உதவிப்பணிகளை வழங்க முடியாதுள்ளதாகவும் சூடானுக்கான ஐ.நாவின் மனித உரிமைகள் இணைப்பாளரான மனுவல் அரன் டாடாசில்வா தெரிவித்தார்.

சூடானின் டர்பூர் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த தவறினால் பொருளாதாரத்தடை விதிக்கப்படுமென ஐ.நா. எச்சரித்துள்ளது.

கடந்த 18 மாதங்களுக்குள் சூடானில் 50000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் எனவே இது தொடர்பாக விசாரணை செய்து மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவித்து ஐ.நா. செயலர் கொபி அனான் குழுவொன்றை அமைத்துள்ளார்.

கறுப்பின மக்கள் கொல்லப்படுவதற்கும் அவர்கள் வீடுகளிலிருந்து விரட்டியடிப்பதற்கும் காரணமான ஜான்ஜா வீட் ஆயுதக்குழுவினரைக் கட்டுப்படுத்த சூடான் அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சூடானில் உதவிப்பணிகளை மேற்கொண்டு வந்த பிரிட்டன் பிரஜை மற்றும் அவரது உதவியாளரான சூடான் நாட்டவர் இருவரும் கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் சூடானில் உதவிப்பணிகளை மேற்கொள்பவர்கள் எவ்வளது பாதுகாப்பு அச்சறுத்தலை எதிர்நோக்க வேண்டியுள்ளதைக் காட்டுகின்றதென்பதை எடுத்துரைப்பதாக உதவிநிறுவனங்கள் தெரிவித்தன.

## உலக நோக்கு

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிப்பணிகளை வழங்க முன்னர் வேறு சில தடைகள் இருந்தன. ஆனால் தற்போது பாதுகாப்பு பிரச்சினையே முக்கிய தடையாக உள்ளதாக சில்வா தெரிவித்தார்.


இந்த மக்களுக்கான உதவிப் பணிகளை எடுத்துச் செல்லும் வேளை கொள்ளையர்கள் அவற்றைக் கொள்ளையடித்துச் செல்வதாகவும் இதனால், தாம் மிகுந்த கவலையடைவதாகவும் அரசாங்கத்திற்கும் கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறையில் உள்ள போதும் தற்போது வன்செயல்கள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## முக்கிய அறிவித்தல்

14.10.2004ல் அதிஷ்டம் பார்க்கப்படவிருந்த பாடும்மீன் கழக சீட்டிழுப்பு, தவிர்க்கமுடியாத காரணங்களால் பின் போடப்பட்டுள்ளது. சீட்டிழுப்பு 25.12.2004ல் இடம்பெறும்.

(C/3259) குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம்.

## படங்களும் செய்திகளும்



காஸாவின் மேற்குக் கரைப் பகுதியில் கட்டடம் ஒன்றுக்குள் மறைந்திருந்த ஹமாஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினரான இமாட் குவாசமா என்பவரை இஸ்ரேல் படையினர் கைதுசெய்து அழைத்துச் செல்வதைக் காணலாம்.



ஈராக்கின் மொசூல் நகரில் அமெரிக்க இராணுவத் தொடரணி ஒன்றின் மீது நேற்று நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தற்கொலையாளியின் வாகனம் தீப்பிடித்து எரிவதைக் காணலாம். இந்தச் சம்பவத்தில் மூன்று அமெரிக்கப் படையினர் காயமடைந்தனர்.



ஈராக்கில் சதார் ஆதரவுக் கிளர்ச்சியாளர்களால் ஒப்படைக்கப்பட்ட கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகளை ஈராக்கிய தேசிய காவல் படையினர் பார்வையிடுவதைக் காணலாம். அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னர் சகல சட்டவிரோத ஆயுதங்களையும் களையப் போவதாக ஈராக் அரசாங்கம் கூறுரைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஓமந்தை சோதனைச்சாவடியில் முள்ளியவளை வாசி கைது!

(வவுனியா)

போலி தேசிய அடையாள அட்டையை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முள்ளியவளை வாசியொருவரை ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து படையினர் நேற்றுமுன்தினம் நண்பகல் கைது செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கைதானவர் வல்லிபுரம் வசந்தராஜா என வவுனியா பொலிசார் தெரிவிதனர்.

இதேவேளை, வாகனம் தொடர்பான போலி ஆவணங்களை வைத்திருந்ததாக குற்றம்சுமத்தி, மன்னார் உப்புக்குளம் வாசியொருவர் மடு வீதி சோதனைச் சாவடியில் வைத்து மற்றுமொரு சம்பவத்தின் போது கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

என்.ராஜேந்திரா என்ற இந்த நபர் அவரது வாகனத்துடன் மன்னார் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதான முயற்சிகளை...

கிழக்கில் நிலவும் சூழல், பெருகிவரும் வன்முறைகள் குறிப்பாக படுகொலைகளை வைத்துப் பார்க்கும்போது சமாதான முயற்சியில் நம்பிக்கை கொள்வதற்கு மிகக்குறைவான காரணங்களே தென்படுகின்றன.

ஆனாலும், நாங்கள் அரசுடனும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறோம்.

நிலைமை கடினமாகும்போது சம்பந்தபபட்டவர்களுடன் தொடர்ந்து பேசுவதும், அவர்களுக்கிடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துவதும் மிகவும் அவசியமானது. மேலும் நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கு அவர்களை வரச்செய்ய வேண்டிய தேவையும் இருக்கிறது. அதனையே நாம் தற்போது செய்து வருகிறோம்.

பாதுகாப்பு நிலவரமே இன்று பேச்சுக்களை ஆரம்பிப்பதில் பாரிய பிரச்சினையாக அமைந்துள்ளது. அதாவது கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு நிலவரமும், அங்கு நடைபெறும் அரசியல் படுகொலைகளையும் கூர்ந்து அவதானித்து வருகின்றோம்.

கடந்த வாரம் ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது, இது தொடர்பாக நீண்டநேரம் விவாதித்தோம்.

தமிழ்ச்செல்வன் அடுத்த வாரம் நோர்வேக்கு வருகைதரவுள்ளார். அவ்வேளை அவரை, நானும் எமது வெளிவிவகார அமைச்சரும் சந்திக்கவுள்ளோம். போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தெளிவாக மதிக்கப்படவேண்டும் என்பதே எமது வலுவான கருத்தாகும்.

இன்றைய சூழலில் படுகொலைகள் முற்றாக நிறுத்தப்பட்டு இருதரப்பும் சமாதானப் பேச்சில் ஈடுபடவேண்டும் என்பது தொடர்பாகவே எல்லோரும் வலியுறுத்தி வருகின்றோம். இது விடயத்தில் சர்வதேச சமூகம்கூடப் பொறுமையிழந்து வருவதையும் நாம் விளக்கிக் கூறியுள்ளோம்.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சு தொடரவேண்டும் என்பதற்காக முனைகிறோம். இந்த நிலையில் அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்டிருக்கக்கூடிய முரண்பாடுகள் குறித்தோ, தெற்கில் நிலவும் அரசியல் பூசல்கள் குறித்தோ நாம் எதையும் கூறுவதற்கில்லை.

இலங்கை இனப்பிரச்சினையின் வரலாற்றில் தெற்கு சிங்களக் கட்சிகளின் குழப்பநிலை நீடித்துவரும் ஓர் பிரச்சினை. அதைப்பற்றியெல்லாம் எமக்குக் கவலையில்லை. நாட்டில் அமைதி ஏற்படவேண்டும் என்பதே நோக்கம்.

சர்வதேச நிதியுதவியில் பெரும்பகுதி சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதால் இலங்கைக்குக் கிடைக்காமல்போயுள்ளன. ஆனால், அவை கிடைக்காமலே போய்விடும் எனக் கூறிவிடமுடியாது.

நாம் நம்பிக்கையுடன் இருக்கிறோம். அதனால்தான் சமாதான முயற்சியைத் தொடர்வதற்காக முயல்கிறோம். இலங்கை இனப்பிரச்சினைகள் தீவிரமானவை என்பது அனைவருக்கும் தெரியும். எனினும் எமது விடா முயற்சி தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலை ஹர்த்தாலால்...

எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருகோணமலையின் முக்கிய நகரங்களில் வீதித்தடைகளை போட்டு அனைத்துப் போக்குவரத்தையும தடைப்படுத்துவதுடன் வெளிமாவடடத்திற்கான விநியோகத்தை முற்றாகத தடைசெய்வதற்கும் வேலைநிறுத்தம் மற்றும் கடை அடைபபு, பூரணஹர்த்தால் அனுஷடிக்குமாறு வடகிழக்கு சிங்கள அமைப்பு எற்பாடு செய்திருந்தது. நேற்றுத் திருகோணமலை மாவட்ட இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. சிங்கள கிராமஙகளிலுள்ள பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. திருகேணமலை நகரில் அமைந்துள்ள மீன்சந்தை மொத்த வியாபார நிலையம், மரக்கறிச் சந்தை தவிர அனைத்து வியாபார நிலையங்களும் வழமைபோல் இயங்கின.

திருகோணமலை நகரில் அமைநதுள்ள தமிழ் பாடசாலைகள், அரச, திணைக்கள், தனியார் நிறுவனங்களும் வழமைபோன்று இயங்கின.

நேற்றைய ஹர்த்தாலின்போது பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும் அசம்பாவிதங்களைத் தடுக்கும் நோக்குடன் ஆயிரக்கணக்கான பொலிஸாரும், இராணுவத்தினரும், கடற்படையினரும் பிரதான சந்திகள், முக்கிய கேந்திர நிலையங்களில் குவிக்கப்பட்டிருந்தனர்.

நான்காம் கட்டைச் சந்தியில வாகனப் போக்குவரத்தை தடைசெய்வதற்காக வீதித்தடைகளைப் போட்டு சிங்கள இளைஞர்களும் மக்களும் காத்திருந்தனர்.

வாகனங்கள் மற்றும் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாகச் செயற்படுவோர் சுடப்படுவர் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், வீதியின் இரு மருங்கிலும் பொலிஸாரும், இராணுவத்தினரும் கைகோர்த்து நின்றனர். திருகோணமலையிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் உற்பத்திப் பொருட்களின் விநியோகத்தை தடைசெய்வதற்கு ஹர்த்தால் ஏற்பாட்டாளர்கள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

பிறீமா ஆலையிலிருந்து மாவும், ரோக்கியோ சீமெந்து ஆலையிலிருந்து சீமெந்தும், சீனன்குடா எண்ணெய் குதங்களிலிருந்து இந்தியன் ஓயில் நிறுவனத்தின் எரிபொருட்களும் திருகோணமலையிலிருந்து கடலுணவுப் பொருட்களும்வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

கடந்த 30 தினங்களாக மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்பாக நடைபெற்றுவந்த சத்தியாக்கிரகப் போராட்டம் வழமைபோன்று நேற்றும் நடைபெற்றன. நேற்றுகாலை 10 மணக்கு திருகோணலை அனுராதபுர வீதியில் மகிந்தபுரம் என்ற பகுதியால் வவுனியாவுக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் மீது சிங்கள இளைஞர்கள் கற்களை வீசி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(04,10)


### இறுதி கிரியைகள் பற்றிய அறிவித்தல்

**நாகமுத்து ஐயாத்துரை**

*(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர்)*

நெடுந்தீவு பத்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து ஐயாத்துரை அவர்கள் கடந்த 11.10.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2004) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நெடுந்தீவு கிழக்கு கட்டுராஞ்சல்லி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10 ஆம் வட்டாரம்*
*நெடுந்தீவு*

தகவல்:-
இ.சிவகுமாரன்
(மருமகன்)


## தாக்கியதாக...

44 பேர் நேற்று அடையாள அணிவகுப்புக்குச் சமுகமளித்திருந்தனர். இந்த அடையாள அணிவகுப்பு காலை 9.30 மணிமுதல் மதியம் ஒரு மணிவரை இடம்பெற்றது. இதில் 20 ஆவது சந்தேக நபரான தனபால முதலாவது சாட்சியான றொகான் சந்திரசேகரவினால் அடையாளம் காட்டப்பட்டார். அடுத்து 44 ஆவது சந்தேக நபரான புஸ்பலால் சம்பவ இடத்தில் நின்ற முதலாவது சாட்சியாலும் தம்மைத் தள்ளியதாக இரண்டாவது சாட்சி பெரோசாலும் அடையாளம் காட்டப்பட்டார்.

இவர்களை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தரத்தில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தலா 15,000 ஆட்பிணையில் விடுமாறும், நீதிமன்ற அனுமதி இன்றி யாழ்.பொலிஸ் நிலையத்தை தவிர வேறு இடத்திற்குச் செல்லக்கூடாது எனவும் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா பணித்துள்ளார். மற்றைய 42 சந்தேக நபர்களும் ரூ 15,000 சொந்தப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த அடையாள அணிவகுப்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சார்பாக சட்டத்தரணி றெமிடியசும், பொலிஸார் சார்பாக சட்டத்தரணிகள் ரி.சிவலிங்கம், தனபாலன், ஏ.ஈ.ஏகநாதன் ஆகியோரும், கொழும்பு பொலிஸ் தலைமையக சிரேஷ்ட பொறுப்பதிகாரி பத்மஸ்ரீ குணசேகர ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

அடையாள அணிவகுப்பில் ஈடுபடாத இரண்டு சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்பு இன்றுகாலை 9 மணிக்கு யாழ். நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 2 ஆம் ...

களில் பட்டதாரிகளுக்கான பயிற்சிக் கடிதங்கள் மாகாணசபை மட்டத்திலிருந்தே அனுப்பப்படும்.

இதேவேளை இந்தப் பட்டதாரிகளுக்கான நியமனங்கள் நிரந்தரமானதா என்ற சந்தேகத்திற்கு கருத்து தெரிவித்த பொதுத் திறைசேரி செயலாளர் கலாநிதி ரி.பி. ஜயசுந்தர - இவை அனைத்தும் நிரந்தர நியமனங்கள் எனவும், இந்த பயிற்சிகளின் நிறைவில் அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (தே)

## திருமலை..

எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் - கிரனேட் சிதறல்களைக் கண்டுபிடித்ததுடன், பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஊர்காவற்படையினரை விடுவிக்க காலக்கெடு விதித்த வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு, தாம் கோதுமை மா, எரிபொருள் விநியோகத்தை நிறுத்தப்போவதாக எச்சரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## காணி...

இந்த வழக்கில் இவர் குற்றவாளியாகக் கருதப்பட்டால் அவர் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டி நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர் இராணுவ சேவையிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹெல உறுமயவின்
# தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து விலகுகிறார் சுமங்கல தேரர்!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் ஏற்பட்டிருக்கும் பூசல்கள் வலுவடைந்துவருவதால், இந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுபபினரான வண.கொலன்னாவ சுமங்கல தேரர் இன்று தான் வகித்து வந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிய சுமங்கல தேரர், தான் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து விலகவுள்ளமை குறித்துக் கருத்துவெளியிடுகையில்-

அரசியல் தெரியாத சாதாரண தலைமையின்கீழ் அரசியல் செய்வதை விரும்பாததாலேயே இந்தப் பதவியிலிருந்து விலகுகிறேன் எனத தெரிவித்தார்.

இதேவேளை மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளின் ஆலோசனையின்படி தாம் இனிமேல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார். (01)

# வணிகர் கழகக்குழு சீனாவுக்குப் பயணம்

யாழ் வணிகர் கழகத் தலைவர் ஜெயராசா தலைமையிலான 20 பேர்கொண்ட யாழ்.வர்த்தகப் பிரமுகாகள்குழு ஒன்று இன்று சீனாவிற்கான பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

சீனாவில் நடைபெறும் வர்த்தகக கண்காட்சியில் கலந்துகொள்வதற்காகவே அவர்கள் அங்கு செல்லவுள்ளனர்.

பத்து தினங்கள் தங்கியிருக்கும் இவர்கள் சீன வர்த்தக பிரமுகர்களை நேரில் சந்தித்து வர்த்தக உறவுகளைப் பலப்படுத்துவதுடன், நேரடியாகப் பொருட்களை இறக்குமதி செய்வது குறித்தும் கலந்துரையாடுவர். இந்தக் குழுவினர் பாங்கொங்கிற்கும் செல்வர்.

## இந்தியாவின்...

பலாலி விமான ஓடுதளத்தைத் தரமுயர்ததுவதற்கே விரும்புகிறோம். இந்த விடயத்தில் இந்திய - இலங்கை அரசாங்கங்கள் விரைவில் விபரங்களை பரிமாறும் என்று நாம் காத்திருக்கிறோம்.

இந்தியாவின் பங்களிப்புடன் இப்பணியை நிறைவேற்றுவது குறித்து தொலைபேசி உரையாடல் மூலம் இந்தியாவிடமிருந்து உறுதிமொழி கிடைத்திருக்கிறது. இந்த மாதம் இரு நாடுகளும் இதுதொடர்பாக கொழும்பில் பேச்சு நடத்தவிருக்கின்றன.

இந்தியா மற்றும் அமெரிக்காவின் உதவிகளை விலக்கிவிடுவது என்பது குறித்து அரசாங்கம் முடிவெடுக்கவில்லை. ஆனால், ஓடுபாதையில் உள்ள அவசர திருத்தப் பணிகள் மட்டுமே செய்து அன்றாடப் பணிகளை தடங்கலின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நாம் இப்போது சில நிரப்புதல் வேலைகளை மட்டும் செய்கிறோம். இதைவிட வேறு தரமுயர்த்தும் நடவடிக்கைகளில் இறங்கவில்லை. விமான ஓடுபாதையை வெளிநாட் உதவியுடன்தான் தரமுயர்த்த முடியும். அந்த உதவிக்கு இந்தியாவை நாடியுள்ளோம். இந்த இடத்தில் அமெரிக்காவின் தோற்றம் எமக்குத் தெரியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## படகிலிருந்த...

சென்றனர். கரையிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்தில் படகை நிறுத்திய இவர்கள், கடலில் வலையை வீசிவிட்டு படகில் படுத்திருந்தனர். அப்போது அப்பகுதியில் வந்த படகொன்றில் இருந்தவர்கள் 'எந்த இடத்து போட்' எனக் கொச்சைத் தமிழில் கேட்க, படுத்திருந்தவர்கள் மணற்காடு போட் எனப் பதிலளித்தனர்.

இதையடுத்து தமது படகை மிக அருகாகக்கொண்டுவந்து நிறுத்தி மீனவர்களின் படகினுள் ஏறி இருவர் மீதும் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். படகின் இயநதிர வயர்களையும் அறுத்ததோடு கம்பான் கயிறுகளினாலும் தாக்கியதோடு படகில் இருந்த மீனவர்களின் சாரத்தைக் கழற்றி அவர்களின் கைகளைக் கட்டியுள்ளனர்.

இயந்திரத் தளப் பகுதிக்குள் இருந்தவர்களுக்கு மேல்தட்டில் இருந்தவரைப்பற்றித் தெரியவில்லை. அந்தப் பகுதிக்குள் இருநதவர் வாயினால் கட்டை அவிழ்த்து மேல்தட்டில் பார்த்தபோது அவரைக் காணவில்லை. அவர் படகை வலித்துக்கொண்டு சிறிதுதூரம் சென்றபோது ஏனைய மீனவர்களின் உதவியுடன் கரைதிரும்பினார். காணாமற்போன மீனவரைத் தேடும் பணி நடைபெற்றுவருகின்றது.(14)

### தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல:- 1656 திகதி:- 12.10.2004

வெற்றி இலக்கங்கள்

X 3 8 3 3 2 8

அடுத்த சுப்பர் பரிசு 361 லட்சத்துக்குமேல்

### சர்வதேச நாணயங்களுக்கான இலங்கை வங்கியின் நாணயமாற்று விகிதங்கள் வருமாறு

| நாணயங்கள் | கொள்விலை ரூ.ச | விற்பனைவிலை ரூ.ச |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 103.37 | 104.24 |
| யூரோ | 126.87 | 128.71 |
| ஸ்டேலிங் பவுண் | 184.74 | 187.04 |
| சுவிஸ் பிராங் | 81.92 | 83.23 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org